# ஜலதீபம்

லேக்ஹவுஸ் இந்து மன்றம்

ලේක්හවුස් හින්දු සංගමය

THE HINDU ASSOCIATION OF LAKE HOUSE

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Reg. No. HA/4/C/120

**The Hindu Association of Lake House**

23rd October 2012



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லேக் ஹவுஸ் ஸ்தாபகர் டி.ஆர்.விஜயவர்த்தனவை நன்றியோடு நினைவு கூருகின்றோம்

ලේක් හවුස් නිර්මාතෘ ඩී. ආර්. විජයවර්ධන මහතා ගෞරවපූර්වකව සිහිපත් කරමු

**Our sincere gratitude to the Lake House Founder D.R.Wijewardene**







# நவராத்திரி விழா

# ஜலதீபம்

23 - 10 - 2012

# லேக்ஹவுஸ் இந்து மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திருச்சிற்றம்பலம்**

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை

**திருச்சிற்றம்பலம்**

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே
வானமளந்ததனைத்து மளந்திடும் வண்மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத் துலங்குக வையகமே
தொல்லை வினை தருதொல்லையகன்று சுடர்க தமிழ்நாடே

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து வளர் மொழி வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Chairman Message

The observance of the Navarathri Festival by the Lake House Hindu Association has become an annual fixture. This is the ninth consecutive year that the Association is conducting this festival, one of the most sacred and significant events in the Hindu calendar.

Navarathri literally means 'nine divine nights' during which Hindus all over the world pay homage to Goddess Durga (Destroyer of Evil), Lakshmi (Goddess of Wealth and Beauty) and Saraswathi (Goddess of Learning and Wisdom). This is a time for devotion, purification and reflection for all Hindus.

Navarathri has transcended ethnic and religious boundaries to become a national festival, which augurs well for the process of peace and reconciliation in our Motherland. Indeed, over the last few years I have seen how ANCL employees following other faiths actively contribute to making this event a success, setting an example to the rest of society. This is also in line with the ANCL's vanguard role in forging national unity. I am also aware that the Association engages in various other worthy causes. The ANCL management and employees will always encourage such meritorious acts.

I wish the Lake House Hindu Association all success in their future endeavours.

**Mr. Bandula Padmakumara**
Chairman/ Managing Director
ANCL

# சாந்தி நாவுக்கரசனின் வாழ்த்துச் செய்தி



மனிதனை மனிதனாக வாழ வழி காட்டி ஒளியூட்டுவனவாய் மிளிர்வன மதங்களே. நெறிதவறி சீர்கெட்டு வாழும் மனிதனை நேர்வழிக்குக் கொண்டுவர மதங்கள் கூறும் விரதங்களும் விழாக்களும் விளங்குகின்றன. ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வோர் விரதம் சிறப்பித்துக் கூறப்படு கின்றது சிவனுக்கு சிவராத்திரி, முருகனுக்கு கந்தசஷ்டி, விநாயகருக்கு சதுர்த்தி என சிறப்பான விரதங்கள் பல கூறப்படுவதுபோல் சக்திக்கு ஒன்பது இரவுகள் கொண்ட நவராத்திரி விரதம் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. துர்கா, லட்சுமி, சரஸ்வதி என முப்பெரும் தேவியருக்கும் பூஜை வழிபாடுகள் செய்து விழாக் கொண்டாடப்படுகின்றது.

ஆலயங்கள், சமய நிறுவனங்கள், பாடசாலைகள் என எல்லா இடங்களிலும் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுவது மகத்துவமே. அவ்வகையில் லேக்ஹவுஸ் இந்து மன்றமும் வாணி விழாவை இவ்வருடமும் சிறப்பாக நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளமை பாராட்டிற்குரியது. இவ்விழாவினையொட்டி வெளிவரும் 'ஜலதீபம்' சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி அளிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இறைபணியிலும், சமயப் பணியிலும், சமூகப் பணியிலும் ஆர்வத்துடனும், ஈடுபட்டு வரும் லேக்ஹவுஸ் இந்துமன்ற நிர்வாகிகள் அனைவருக்கும் எமது மனமுவந்த பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

'ஜலதீபம்' சிறப்பு மலர் நல்ல பல ஆக்கங்களை வெளிக்கொண்டுவர வேண்டும் என அலாவி வாழ்த்துகின்றோம்.

**சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்,
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தினகரன் பிரதம ஆசிரியரின் செய்தி

உலகை இயக்கும் உன்னத வழிபாடாக நவராத்திரி அமைகின்றது. லேக்ஹவுஸ் இந்து மன்றம் ஆண்டு தோறும் பக்தி பூர்வமாக ஏனைய இன, மதங்களைச் சேர்ந்த ஊழியர்களோடு இணைந்து நவராத்திரி வழிபாட்டை மேற்கொண்டு வருகின்றது.

இதன் மூலம் லேக்ஹவுஸ் நிறுவனத்தில் பணியாற்றும் இந்துக்கள் கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றுக்கு ஆதாரமான முப்பெருந்தேவியரின் அருளை வேண்டி நிற்கும் அதேசமயம் தமது ஸ்தாபனத்திற்கும் சிறப்பைச் சேர்க்கும் வகையில் தொடர்ந்தும் பல சமய, சமூகப் பணிகளைச் செய்து வருகின்றனர்.

இம்முறை மன்ற உறுப்பினர்கள் தெரணியகலை, நூரி முதலாம் பிரிவு அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தில் தொடர்ந்து இரு தினங்கள் (மகேஸ்வர பூஜை) அன்னதானம் வழங்கி சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

இவ் வகையான பல நற்பணிகளை மேலும் செய்வதற்கு ஊடக இல்லமாகிய 'லேக்ஹவுஸ்' இந்து மன்றத்திற்கு சகல சக்திகளும் வளமும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**எஸ். தில்லைநாதன்**
பிரதம ஆசிரியர்
தினகரன்

# தலைவரின் வாழ்த்துச் செய்தி



கல்விக்கும், செல்வத்துக்கும், சக்திக்கும் அதிபதிகளாக விளங்கும் லக்ஷ்மி, சரஸ்வதி, துர்க்கை என்ற மூன்று தேவியர்களுக்கும் விழா எடுக்கின்ற சக்தி வழிபாட்டுக்கு உகந்த சாரதா நவராத்திரியிலே வழமை போன்று இம்முறையும் நல்லோரின் ஆசியுடன் எமது லேக்ஹவுஸ் இந்து மன்றம் ஜலதீபம் சஞ்சிகையை பெருமையுடன் வெளியிடுகிறது.

"லேக்ஹவுஸ் இந்து மன்றம்" எடுத்த சகல முயற்சிகளும் வெற்றியளித்துக் கொண்டிருக்கின்றன. எமது சங்க உறுப்பினர்களின் ஆர்வமும் ஒத்துழைப்பும் எமக்கு மேலும் உத்வேகமாக அமைந்துள்ளது.

'கல்விக்கு கைகொடுப்போம்' பஞ்சபுராண தோத்திரத் திரட்டு, வித்யாதானம், மகேஸ்வர பூஜை (அன்னதானம்) ஒவ்வொன்றாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.


லேக்ஹவுஸ் இந்து மன்றம் தமிழ் மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற ஒரு அமைப்பாக உருவாக வேண்டும் என்ற எமது எதிர்பார்ப்பு இன்று நிறைவேறியுள்ளதுடன் மேலும் ஒருபடி சென்று வெளிநாடுகளிலும் பேசப்படுகின்ற ஒரு அமைப்பாக உருவாகியுள்ளது.

எமது பஞ்சபுராண தோத்திரத் திரட்டின் இரண்டாவது பதிப்பும் அச்சிட்டு வெளியிடுவதற்கு திருவருள் கூடியுள்ளது. எமது சமூக, சமய பணிகள் மென்மேலும் தொடர என்னை ஆட்கொண்ட ருளும் எல்லாம் வல்ல அன்னை வடிவாம்பிகா தேவி சமேத முன்னைநாதப் பெருமானை வேண்டி நிற்கிறேன்.

**கே. அசோக்குமார்ராஜா**
தலைவர்,
லேக்ஹவுஸ் இந்துமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாரமஞ்சரி ஆசிரியரின் செய்தி

லேக் ஹவுஸ் இந்து மாமன்றம் வருடாந்தம் நடத்தும் வாணி விழாவின் போது வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். லேக் ஹவுஸ் நிறுவனத்தை ஸ்தாபித்த டி.ஆர். விஜயவர்தன அவர்களது இன, மத, மொழி பேதமற்ற கொள்கையை மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வரும் நிர்வாகத்தின் மற்றுமொரு படிக்கல்லாக நமது நிறுவனத்தின் இந்து மன்றத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

எமது நிறுவனத்தில் பௌத்த மதத்திற்குரிய அமைப்பு மட்டுமே ஆரம்ப காலம் முதல் இருந்து வந்தது. இப்போது இங்கு கடமையாற்றும் ஊழியர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதச்சார்பான அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டு அவை தத்தமது சமய விழாக்களின் போது ஏனைய சகோதர இன,மத,மொழி பேசும் ஊழியர்களுடன் இணைந்து அவற்றைக் கொண்டாட வழி வகை செய்யப்பட்டுள்ளமை உண்மையில் வரவேற்கத்தக்க ஒரு விடயம். அந்த வகையில் இந்து மன்றம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் அதன் பணிகள் யாவுமே பாராட்டத்தக்க வகையில் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. சமய, ஆன்மீகப் பணியுடன் மட்டும் நின்றுவிடாது சமூகப் பணிகளையும் இவர்கள் செய்துவருவது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. குறிப்பாக நாட்டில் சுனாமி ஏற்பட்ட வேளையிலும், வரட்சி, வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போதும் இவர்கள் ஆற்றிய பணிகள் மகத்தானவை. வன்னியில் இறுதி யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த தமிழ் மக்களுக்கு இவர்கள் நேரடியாகச் சென்று உதவிகள் பல புரிந்தமை இவர்களது சமூக சேவைக்கு மகுடம் சூட்டுவதாக அமைந்திருந்தது.


அதுமட்டுமல்லாது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதி பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக புலமைப்பரிசில் மற்றும் சாதாரண தர, உயர்தர பாடங்களுக்குரிய பயிற்சி வகுப்புகளையும், வழிகாட்டல் கருத்தரங்குகளையும் இவர்கள் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர். வருடம் தோறும் இந்த ஜலதீபம் எனும் மலரையும் பல ஆக்கபூர்வமான விடயங்களுடன் வெளியிட்டு வருகின்றனர். அதிலே மாணவர்களுக்கிடையில் நடத்தப்படும் கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற கட்டுரைகளையும், சமயப் பெரியாளர்களின் ஆக்கங்களையும் வெளியிட்டு வருவது மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது.

எதிர்காலத்திலும் இவர்களது ஆன்மீக, கல்விப் பணிகள், சமூக சேவைகள் சிறப்படைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

**தே. செந்தில்வேலவர்**
பிரதம ஆசிரியர், தினகரன் வாரமஞ்சரி

# செயலாளரின் ஆசிச் செய்தி



செய்யும் தொழிலே தெய்வம் என்றால் தொழில் செய்கின்ற இடம் ஆலயம். அதில் அன்றாடம் பூஜைகள் செய்ய முடியாவிட்டாலும், ஆண்டுக்கொருமுறையாவது பூஜை செய்வது சாலச் சிறந்தது. அதற்குரிய ஒரு நாளைத் தேர்ந்தெடுக்க இந்து சமயத்தவராகிய எமக்கு இந்த நவராத்திரி வழியமைத்துக் கொடுத்துள்ளது. நவராத்திரி என்றாலே சக்தியை வழிபடுவது என்பதுதான் அர்த்தம். உலகம் அனைத்தும் சக்தி மயம் என்பதை விளக்குவதே நவராத்திரியின் தத்துவமாகும். துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி என முப்பெருந் தேவியருக்குரிய இந்நன்னாளில் பத்திரிகைத் துறையைச் சேர்ந்த எமக்கு இந்த முப்பெரும் தேவியரின் அருட் கடாட்சம் தேவையென்பதால் அன்றைய தினத்தில் இந்தப் பூஜையை செய்யக்கிடைத்தது போற்றுதற்கரிய பேறாகும்.

கல்வியில் கரைபுரண்ட கல்விமான்கள், புத்திஜீவிகள் முதல் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களும் அன்றாட படித்துப் பயன்பெறும் ஒரு சாதனம் பத்திரிகையாகும். அறிவு, மொழி என அனைத்து விடயங்களும் கரைபுரண்டு ஓடுகின்ற ஒரு மகாநதி இது. இங்கு கடமைபுரிகின்ற அனைவரும் அன்னை சரஸ்வதி தேவியின் அருட்கடாட்சத்தைப் பெற்றவர்கள். உலகிலுள்ள கல்வியறிவு பெற்றோரும் சரி, அற்றோரும் சரி வாழ ஏதேனும் தொழிலை மேற்கொண்டிருப்பர். அத் தொழிலை வழிபடவேண்டிய தினம். அத்தொழிலுக்கு நன்றி சொல்லவேண்டிய தினம். இந்த தொழிலை செய்வதற்கு நமக்கு பயன்படும் பொருள்களை தொழவேண்டிய தினம். ஆகவே இத்தினம் ஆயுத பூஜை என்று கொண்டாடப்படுகிறது.

லேக்ஹவுஸில் கடமையாற்றும் எமக்கும் வருடாந்தம் இந்த விழாவை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் அனைவருக்கும் அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திப்பதுடன் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கே. ஈஸ்வரலிங்கம்**
செயலாளர், லேக்ஹவுஸ் இந்துமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லேக்ஹவுஸ் இந்து மன்ற வரலாறு

தமிழர்கள் எங்கெல்லாம் தொழில் செய்கின்றார்களோ அது சிறிய இடமாக இருந்தாலும் அங்கெல்லாம் வருடாந்தம் கலைமகளுக்கு விழா எடுத்து பூஜை நடத்தத் தவறுவதே இல்லை. இந்த வகையில் இன்று பாடசாலை முதற்கொண்டு தொழிலகங்களில் எல்லாம் சரஸ்வதி பூஜை நடத்தப்படுகின்றது. பத்திரிகை உலகம் என்பது எல்லைகள் அற்று பரந்து விரிந்து கிடக்கும் ஓர் கடல். எழுத்துக்களும் வார்த்தைகளும் வசனங்களும் கவி வரிகளும் வர்ண ஜாலம்போடும் உன்னதமான ஓர் உலகம். நவீன தொழில் நுட்பங்களும் புதிய புதிய கலை வடிவங்களும் ஊற்றெடுத்து பாயும் பல்கலைக்கழகம். இங்கு கடமையாற்றும் அத்தனை இந்து ஊழியர்களின் உள்ளங்களிலும் இத்தனை கலைகளையும் விதைத்தவள் கலைமகளாம் சரஸ்வதி தேவி.

எனவே இந்த கலைமகளுக்கு வருடாந்தம் விழா எடுக்க வேண்டும் என்ற எண்ணம் லேக் ஹவுஸில் கடமை புரிந்த தமிழர்களிடையேயும் துளிர்விட்டுக் கொண்டு இருந்தது. ஆனால் 'பூனைக்கு மணி கட்டுவது யார்?' என்ற வினாவோடு இந்தக் கைங்கரியம் இழுபட்டுக்கொண்டே போனது. காலமும் நேரமும் கூடிவரும் வேளையில் காலமும் கனிந்தது. கைமேல் பலனும் கிடைத்தது. இந்த நாளில் இந்த இடத்தில் இந்த நேரத்தில் இந்தக் கைங்கரியம் நடைபெற வேண்டும் என இறைவன் திருவுளம் கொண்டதற்கமைய 2002ஆம் ஆண்டு லேக் ஹவுஸில் முதன் முதலாக கலைமகளுக்கு விழா எடுக்கப்பட்டது. 1930 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அரச தமிழ் பத்திரிகை நிறுவனமொன்றிலே 72 ஆண்டுகளுக்குப் பின் 2002 ஆம் ஆண்டு கலைமகள் விழா நடத்தப்பட்டுள்ளது. இது வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்க வேண்டிய ஒரு விடயம்.

லேக் ஹவுஸில் கடமையாற்றிய அனைத்து அதிகாரிகளதும் ஊழியர்களதும் ஒத்துழைப்போடு கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானத்தில் பூஜை வழிபாடுகளோடு இந்தக் கலைமகள் விழா நடத்தப்பட்டது.

> "நாடெங்கும் அரச தமிழ் இதழாக உலா வரும் பத்திரிகை தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரியாகும். இந்தத் தினகரன் இதழ் 1930ஆம் ஆண்டு முதல் மணம் பரப்பிக் கொண்டு இருக்கின்றது. இந்தத் தினகரன் இதழை வெளியிட்டு வரும் நிறுவனம் த அசோசியேட்டட் நியூஸ் பேப்பர் ஒப் சிலோன் லிமிட்டட் என அழைக்கப்படும் லேக் ஹவுஸ் நிறுவனமாகும். லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் டி. ஆர். விஜயவர்த்தன அவர்கள் ஆவார்."

இதுவரை காலமும் லேக் ஹவுஸில் ஏனைய மதங்களுக்கு சங்கங்கள் இருந்தபோதிலும் இந்து மதத்திற்கு என்று எந்தவிதமான அமைப்புகளும் இருக்கவில்லை. இந்தக் குறைபாடு இங்கு கடமையாற்றும் ஊழியர்களின் உள்ளங்களில் நிலவிய பாரிய குறைபாடாகும். வானத்தில் விடிவெள்ளி தோன்றுவது போல் 2002ஆம் ஆண்டு கலைமகளுக்கு விழா எடுக்கப்பட்டதன் பின் அலைமகள், மலைமகள், கலைமகள் என போற்றப்படும் முப்பெரும் தேவிகளின் திருவருளால் இந்து மன்றம் அமைப்பதற்குரிய அத்திவாரமிடப்பட்டு 2004ஆம் ஆண்டு இந்து மன்றம் ஸ்தாபிக்கப்பட்டது.

2002ஆம் ஆண்டு கலைமகள் விழா எடுக்க உந்து சக்தியாக விளங்கியவர்கள் லேக் ஹவுஸ் இந்து அதிகாரிகளும் ஊழியர்களும், அதேபோல் 2004ஆம் ஆண்டு இந்து மன்றத்தை ஸ்தாபிக்க உந்து சக்தியாக விளங்கியவர்கள் 2004ஆம் ஆண்டு இங்கு கடமையாற்றிய இந்துக்கள், எனவே இந்த வகையில் லேக்ஹவுஸில் 2004ம் ஆண்டு கடமையாற்றிய இந்துக்களில் 2004ஆம் ஆண்டு இந்து மன்றத்தில் அங்கத்துவம் பெற்ற இந்துக்கள் அனைவரும் இதன் ஸ்தாபகர்களாக விளங்குகின்றனர்.

லேக்ஹவுஸ் இந்து மன்றத்தில் 2004ஆம் ஆண்டுக்கான தலைவராக பொன் சுரேந்திரனும், செயலாளராக ஏ. பரசுராமனும், பொருளாளராக என். யோகரஞ்சனும், உப தலைவராக வீ. செல்வரவீந்திரகுமரனும், உப செயலாளராக எஸ். ஸ்ரீகாந்தும், உப பொருளாளராக கே. அசோக்குமார் ராஜாவும் தெரிவு செய்யப்பட்டனர். 2004ஆம் ஆண்டு கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் லேக் ஹவுஸ் இந்து மன்றத்தின் வாணி விழா நடத்தப்பட்டது.

**2005ஆம் ஆண்டில்**

2005ஆம் ஆண்டு லேக்ஹவுஸ் இந்து மன்றத்தின் தலைவராக எஸ். எஸ். நாகேஸ்வரனும் செயலாளராக கே. ஈஸ்வரலிங்கமும் பொருளாளராக எஸ். எம். பிரேம்குமாரும் உபதலைவராக தே. ஆனந்தகுமரனும், உபசெயலாளராக எஸ். அனோஜாவும் தெரிவு செய்யப்பட்டனர். 2005 ஆம் ஆண்டின் புதிய நிர்வாக சபை ஜுலை மாதம் தெரிவு செய்யப்பட்டது. 2005.08.24ஆம் திகதி லேக்ஹவுஸ் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் 'சமயங்களும் சமாதானமும்' என்ற தலைப்பில் சர்வமத சொற்பொழிவு நிகழ்வொன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் மடுலுகிரிகே விஜேரட்ண (பௌத்தம்), ரி. இராஜபுவனேஸ்வரன் (இந்து), றிஸா யஹியா (இஸ்லாம்), சிறில் என்டேரமுல்ல (கிறிஸ்தவம்) ஆகியோர் உரையாற்றினர்.

2005.09.27ஆம் திகதி லேக்ஹவுஸ் நிறுவன கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட சர்வமத சொற்பொழிவின் இரண்டாவது தொடரில் பி.எச். செனரத் (பௌத்தம்), எஸ். ஜே. யோகராஜா (கிறிஸ்தவம்), எஸ். எம். மன்சூர் (இஸ்லாம்), மடுலுகிரிகே விஜேரட்ன ஆகியோர் உரையாற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்தம் நடத்தப்படும் கட்டுரை போட்டியுடன் வாணி விழா கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் ஆலயத்தில் 2005.10.11ஆம் திகதி நடத்தப்பட்டது. வாணி விழா மலர் லேக் ஹவுஸ் நிறுவனத்திலேயே இலவசமாக அச்சடிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இம் மலரில் நவராத்திரி பற்றியும் நவராத்திரி நாயகிகள் பற்றிய ஆக்கங்கள் மட்டுமே வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. மன்றத்திற்கு நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக இம்மலரில் விளம்பரங்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஆயிரமாயிரம் ரூபா செலவழித்து அச்சடிக்கப்பட்ட கடிதத் தலைப்பு எந்தவித செலவும் இன்றி லேக்ஹவுஸ் நிறுவனத்தில் அச்சடிக்கப்பட்டது. அங்கத்தவர்களின் தாய், தந்தை, கணவன், மனைவி பிள்ளைகள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் யாராவது இறைவனின் திருவடிகளை அடைந்தால் அங்கத்தவர் கோரும் பட்சத்தில் மரண சகாய நிதியாக 5000/- வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஒரு அங்கத்தவருக்கு ஒரு முறை மட்டுமே வழங்க ப்படும்.

லேக் ஹவுஸ் நிறுவன பஸ்ஸை இலவசமாக பெற்று திருத்தல யாத்திரை செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. உடப்பு, ஸ்ரீதிரௌபதை அம்மன் ஆலயத்திற்கும் முன்னேஸ்வரம் முன்னைநாதர் பெருமானார் ஆலயத்திற்கும் யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. 2006 ஆம் ஆண்டு தைப்பொங்கலை முன்னிட்டு லேக் ஹவுஸ் நிறுவனத்தில் பொங்கல் வாழ்த்து மடல்கள் இலவசமாக அச்சடிக்கப்பட்டு அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. 2006.01.15ஆம் திகதி முதன் முதலாக லேக் ஹவுஸ் நிறுவனத்துக்கு முன்பாக சூரியனுக்கு பொங்கல் வைத்து பூஜை நடத்தப்பட்டது.

இப்பணிகள் யாவும் சிறப்பாக நிறைவேற மன்ற நிர்வாகிகளும் அங்கத்தவர்களும் அளப்பரிய பணிகள் ஆற்றியது நன்றி உணர்வோடு நினைவு கூரத்தக்கது சிவராத்திரியன்று பஜனை செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்து மாமன்றத்தில் பஜனையும் நடத்தப்பட்டது.

### 2006ஆம் ஆண்டில்

2006ம் ஆண்டு நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தின் போது நிர்வாக சபையின் ஏனைய உறுப்பினர்கள் எவரும் மாற்றப்படாது ஈஸ்வரலிங்கத்திற்குப் பதிலாக விசு கருணாநிதி செயலாளராக தெரிவுசெய்யப்பட்டார். அவ்வாண்டு வருடாந்தம் வழமையாக நடத்தப்படும் சிவராத்திரி பஜனை இந்து மாமன்றத்தில் நடத்தப்பட்டது. கட்டுரை போட்டியுடன் சரஸ்வதி பூஜையும் இந்து மாமன்றத்தில் நடத்தப்பட்டது.

### 2007ஆம் ஆண்டில்

2007ஆம் ஆண்டு தலைவராக அனந்த பாலகிட்ணரும், செயலாளராக சியாமளாதேவியும் பொருளாளராக விஸ்வகாந்தனும் உப தலைவராக கே. ஈஸ்வரலிங்கமும் உப செயலாளராக அனோஜா ஸ்ரீகாந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். சிவராத்திரி பஜனை கப்பித்தாவத்தை ஸ்ரீகைலாசநாதர் ஆலயத்தில் நடத்தப்பட்டது.

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகரான டிஆர். விஜேவர்த்தனவின் ஜனன தினத்தையொட்டி கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானத்தில் விசேட பூஜை நடத்தப்பட்டதுடன் வத்தளை அருண் சாந்தி நிலைய சிறுவர்களுடன் எமது மன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடி விருந்தளித்து உபசரித்த நிகழ்வு இடம்பெற்றது. முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்திற்கு பெரும் வரவேற்பு இருந்தது. களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திற்கு திருத்தல யாத்திரை மேற்கொள்ளப்பட்டது.

2007.10.06 இல் நவராத்திரி விழா இந்து மாமன்ற மண்டபத்தில் சிறப்புற நடாத்தப்பட்டது. நவராத்திரியை முன்னிட்டு மாணவர்கள் மத்தியில் கட்டுரைப் போட்டியும் புகைப்படப் போட்டியும் நடாத்தப்பட்டன. வழமையாக வெளியிடப்படும் நவராத்திரி மலர் 'ஜலதீபம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. அவ்வருடம் தலைமை தாங்கிய நிர்வாகக் குழுவின் முடிவிற்கமைய 2007 ஆம் ஆண்டுக்கான ஜலதீபம் விருது பேராசிரியர் சந்திரசேகரனுக்கு வழங்கப்பட்டது.

### 2008ஆம் ஆண்டில்

பெப்ரவரி 23 ஆம் திகதி லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் டிஆர். விஜேவர்தனவின் ஜனன தினத்தை முன்னிட்டு அருண்சாந்தி நிலையக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. லேக்ஹவுஸ் நூலகத்துக்கு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நூல்கள் பெப்ரவரி 28ஆம் திகதியன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மார்ச் 29 ஆம் திகதி களுத்துறை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோயிலுக்கு எமது மன்றத்தினரால் திருத்தல யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் மன்றம் சார்பில் கோயிலுக்கு பஞ்சாரத்தி ஒன்றும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அவ்வருடத்துக்கான நவராத்திரி விழா அகில இலங்கை இந்து மன்றத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

### 2009ஆம் ஆண்டில்

தைப்பொங்கலை முன்னிட்டு வத்தளை அருண்சாந்தி நிலையத்திற்கு 25 கிலோ பால் மா வழங்கப்பட்டது. சிவராத்திரியை முன்னிட்டு கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் தேவஸ்தானத்தில் பான்ஸ் பிளேஸ் சத்தியசாயி நிலையத்தினருடன் பஜனை நடாத்தப்பட்டது.

2009 மே மாதம் 25ஆம் திகதி பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டு புதிய தலைவராக கே.ஈஸ்வரலிங்கமும் செயலாளராக எஸ். அனோஜாவும் உப தலைவராக விசு கருணாநிதியும் தெரிவு செய்யப்பட்டதுடன் 2008 இலிருந்த நிர்வாகக் குழு உறுப்பினர்கள் 2009ஆம் ஆண்டுக்கும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். வவுனியா நிவாரணக் கிராமங்களுக்கு நேரில் சென்ற அங்கத்தவர்கள் மன்றத்தின் சார்பில் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களையும் வழங்கினர்.

2009 ஆம் ஆண்டிற்கான நவராத்திரி விழாவும் ஜலதீபம் மலர் வெளியீடும் முதன் முறையாக லேக்ஹவுஸ் நிறுவனத்தினுள்ளேயே சம்பிரதாயபூர்வமாக நடாத்தப்பட்டது. வழக்கம் போலவே, கட்டுரைப் போட்டியில் பங்குபற்றியோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

### 2010ஆம் ஆண்டில்

2010 ஆம் ஆண்டு ஜனவரி 04ஆம் திகதி லேக் ஹவுஸ் நிறுவனத்தினால் யாழ். - கொழும்பு அதி சொகுசு பஸ் சேவை ஆரம்பிக்க ப்பட்டது. அதற்கு முன்னதாக கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திலே பூசை நடாத்தப்பட்டு பிரார்த்தனையும் ஏனைய சம்பிரதாயங்களும் நடந்தேறின. அதேபோன்ற நிகழ்வுகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கிலும் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் டி. ஆர். விஜயவர்தன அவர்களின் பிறந்த நாள் நினைவு தினத்துக்கான சிறப்புப் பூஜையும் கொம்பனித்தெரு சிவ சுப்பிரமணியசுவாமி கோயிலில் 2010.02.23 அன்று இனிதே நடந்தேறியது.

16.06.2010 அன்று பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டு புதிய தலைவராக கே. அசோக்குமார் ராஜாவும் செயலாளராக செல்வி ம. சாரதாஞ்சலியும் உபதலைவராக திரு. ச. ருக்மணிகாந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான தேர்வும் நடைபெற்றது.

இந்து மன்றம் சார்பில் 'கல்விக்கு கைகொடுப்போம்' எனும் கருப்பொருளிற்கமைய 2010 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருந்த சிலாபம் கல்வி வலய மாணவர்களுக்கு இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெற்றது. நல்லுள்ளம் படைத்த அன்பர்களின் உதவியுடன் இக் கருத்தரங்கு கடந்த 2010.08.15 அன்று வெற்றிகரமாக நடந்தேறியது.

### 2011ஆம் ஆண்டில்

2011.02.23ஆம் திகதி லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் டிஆர்.விஜயவர்தனவின் பிறந்ததின ஞாபகார்த்தமாக ஜனன தின அர்ச்சனைப் பூஜை கொம்பனித்தெரு சிவசுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் நடாத்தப்பட்டது.

2011.04.06ஆம் திகதி கல்விக்குக் கை கொடுப்போம் என்ற தொனிப்பொருளிலான இரண்டாவது செயற்றிட்டமாக, கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறுவர் இல்லத்துக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. வழக்கமாக சிவராத்திரியன்று மேற்கொள்ளப்படும் பஜனை நிகழ்வுகள் நேரப்பிரச்சனை காரணமாக இம்முறை மேற்கொள்ளப்படவில்லை. அவற்றிற்குப் பதிலாக இச் செயற்றிட்டத்துக்கு இந்து மன்றம் சார்பில் ரூ.10,000 ஒதுக்கப்பட்டது. ஏனைய உதவிகள் நலன் விரும்பிகளிடமிருந்து பெறப்பட்டது.

2011.06.09 ஆம் திகதி நடைபெற்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் 2010/2011 ஆம் ஆண்டின் அதே நிர்வாகக்குழு எவ்வித மாற்றங்களும் இன்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டது.


இக்கூட்டத்தில் இதுவரை காலமாக வழங்கப்பட்ட அங்கத்தவர்களின் மரண சகாய நிதி மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற அங்கத்தவர்களின் ஒரு பிள்ளைக்கு வழங்கப்பட்டு வந்த சலுகைத் தொகையான ரூ5,000 ஐ நிர்வாக சபையின் தீர்மானத்துக்கமைய 7,500ரூபாவாக வழங்க முடிவெடுத்தது. மற்றும் இதுவரை காலம் தலைவர் ஒருவருக்கான கால எல்லை அதிகபட்சமாக இரண்டு வருடங்கள் என எழுதப்பட்டிருந்த யாப்பு தலைவர் ஒருவரின் சேவைதிறன் மற்றும் நிர்வாக சபையின் ஆதரவு என்பன கருத்திற்கொண்டு அவரது கால எல்லை நீடிக்கலாம் என நிர்வாகசபையின் ஏகமனதான முடிவின் பேரில் யாப்பு மாற்றியமைக்கப்பட்டது.

2011.07.31 ஆம் திகதி கடந்த ஆண்டைப் போன்று இம்முறை கொட்டகலை தமிழ் மகாவித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கும் நலன்விரும்பிகள் பலரின் அனுசரணையுடன் இம்முறையும் சிறப்பாக நிறைவேறியது.

2011.10.06ஆம் திகதி வழமை போல் நிறுவனத்தினுள்ளேயே வாணிவிழாவும் ஜலதீபம் மலர் வெளியீடும் நடைபெற்றது. கடந்த ஆண்டுகளைப் போலல்லாது இவ்வாண்டு லேக்ஹவுஸ் இந்துமன்றத்திற்கு ஒரு சோதனைக் காலமாக அமைந்திருந்தது. வழமையாக நிறுவனத்தில் இலவசமாக அச்சடிக்கும் ஜலதீபம் மலர் நிறுவனத்தின் நிதி நெருக்கடியால் அதற்கு ஒரு விலை நிர்ணயிக்கப்பட்டது. எனினும் அதனை நிர்வாகக்குழுவின் திறமையான செயற்பாட்டினால் இந்நிலைமை சமாளிக்கப்பட்டது.

மற்றும் வழமையாக கட்டுரைப் போட்டிக்கு சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவுகளில் ஆறுதல் பரிசு பெற்றவர்களுக்கு தலா இவ்விரண்டு ஆறுதல் பரிசில்களை மட்டுமே வழங்கிய எமது மன்றம் இம்முறை ஐந்து ஆறுதல் பரிசில்கள் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

### அட்டைப்பட விளக்கம்



மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா - *படம் :- சிவம் பாக்கியநாதன்*

### 2012ஆம் ஆண்டில்

2011.02.23ஆம் திகதி நிறுவனத்தின் ஸ்தாபகர் டிஆர்.விஜேவர்த்தன வின் ஜனன தினத்தினை முன்னிட்டு வழமைபோன்று கொழும்பு, கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய ஆலயத்தில் இடம்பெற்றது. மற்றும் இவ்வாண்டு எமது மன்றத்திற்கு ஓர் சிறப்பான ஆண்டாகவும் அமைந்தது.

லேக்ஹவுஸ் இந்துமன்றம் முதன்முதலாக தலைவர் கே. அசோக்குமாராஜாவின் ஆலோசனைக்கமைய நிர்வாகக்குழுவின் முயற்சி யுடன் பஞ்சபுராண தோத்திரத்திரட்டு எனும் நூல் 10.03.2012ஆம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் வெளியிட்டு வைத்தது.

இந்நூல் சிறப்படைய அதனை திறம்பட சைவப்புலவர் கலாபூஷணம் செல்லத்துரை அவர்களினால் தொகுத்து வழங்கப்பட்டது. இது லேக்ஹவுஸ் இந்து மன்றத்தின் முதல் வெளியீடாக அமைந்தது. இந்நூல் இலங்கையி லுள்ள பல அறநெறிப் பாடசாலைகளுக்கு பரோபகாரிகளாலும் நல்லுள்ளம் படைத்தவர்களினாலும் கொள்வனவு செய்யப்பட்டு வித்யாதானமாக வழங்கப்பட்டது. இதன் மூலம் உள்நாட்டில் மற்றுமன்றி வெளிநாட்டிலும் எமது மன்றம் சற்று பிரபல்யம் அடைந்தது.

சகல பிரதிகளும் ஒரு மாதத்திலேயே விற்று தீர்ந்து விட்டன. எனவே பலரின் வேண்டுகோளுக்கமைய இப்பஞ்சபுராண தோத்திரத்திரட்டு நூலின் இரண்டாம் பாகம் அச்சிடுவதற்கு முடிவெடுக்கப்பட்டது.

2012.09.22ஆம் திகதி தெரணியகலை நூரி தோட்டத்தில் அமைந்துள்ள அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “சாமி சோறு ஒரு பிடி சாப்பிட்டாலும் வயிறு நிறைஞ்ச மாதிரிதான்”

# நூரி தோட்டத்தில் நடைபெற்ற கோவில் அன்னதானம்


நூரி தோட்டத்தில் சுமார் 500 குடும்பங்கள் வாழ்கின்றன. பெரும்பாலான தொழிலாளர்கள் போதிய வருமானத்துக்காக வெளியிடங்களில் வேலைக்குச் செல்ல, படித்தவர்கள் கொழும்பு, கண்டி போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டனர். குறைவான குடும்பங்களே தோட்டத்தில் பணிபுரிகின்றனர். இக்கோவில் சார்ந்த பகுதியும் கைவிடப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது.

லேக்ஹவுஸ் இந்து மன்றம் நவராத்திரி புண்ணிய காலத்தை சிறப்பாக கவனத்தில் கொள்வதும் பத்திரிகைத் துறை சார்ந்த மன்றம் என்ற வகையில் சரஸ்வதி பூஜையை விமரிசையாகவும் பக்தி பூர்வமாகவும் கொண்டாடுவதும் வழமை. இப்புண்ணிய காலம் நெருங்கி வரும் சமயத்தில் ஏதேனும் ஒரு புண்ணிய காரியமொன்றை மேற்கொள்வது இந்துமன்றத்தின் வழக்கமாக இருந்து வருகிறது. இவ்வகையில் கடந்த வருடம் லேக்ஹவுஸ் இந்து மன்றம் கொட்டகலை தமிழ் வித்தியாலயத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி கருத்தரங்கை வெற்றிகரமாக நடத்தியது.

இவ்வருடம் வசதி வாய்ப்புகள் குறைந்த ஒரு பெருந்தோட்டத்தைத் தெரிவுசெய்து அத்தோட்ட ஆலய வருடாந்த திருவிழா சமயத்தில் பக்தர்களுக்கு சுவையான உண்டி வழங்கி அவர்களின் உடலுக்கும் உள்ளத்துக்கும் நிறைவு தருவது என்ற நோக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது.

இதன் பிரகாரம் தேடுதல் நடத்தி தெரணியகலையில் இருந்து பத்து கி. மீ. தூரத்தில் அமைந்திருக்கும் நூரி தோட்டத்து முதலாம் டிவிஷன் அன்னை ஸ்ரீ முத்து மாரியம்மன் தேவஸ்தான வருடாந்த அலங் காரத் திருவிழாவின் போது இரண்டு நாள் அன்னதான வைபவத்தைப் பொறுப்பேற்று உண்டி வழங்குவது என்று லேக்ஹவுஸ் இந்து மன்றம் தீர்மானித்தது.


தெரணியகலை பகுதியில் அமைந்துள்ள தோட்டங்களில் மாலிபொட தோட்டமும் நூரி தோட்டமும் பிற்பட்ட தோட்டங்களாக விளங்குகின்றன. இத்தோட்டங்களின் முடிவில் வனாந்தர மலைகளின் ஆரம்பம் தொடங்குகிறது. இத்தோட்டங்களில் வசிக்கும் இந்திய வம்சாவளித் தமிழ்த் தொழிலாளர் குடும்பங்கள் கல்வி, பொருளாதார, கலாசார மற்றும் ஏனைய எல்லா மனிதவளத் தரங்களிலும் பிற்பட்டவர்களாகவே விளங்குகின்றனர்.



அறங்காவலர்
ஏ. கணேசன்

இந்துக்களான நாம் இவர்களின் முக்கிய, அடிப்படையான மற்றும் கட்டமைப்பாக அமையக் கூடிய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வலு இல்லாதவர்களாக இருந்தாலும் கூட, சைவமும், தமிழும் ஒன்றிணைந்து இருப்பதால்தான் தமிழ்க் கலாசாரத்தையும் நமது பாரம்பரிய விழுமியங்களையும், இன்றைய காலக்கட்டத்தில் நாம் எதிர்கொள்ளும் சவால்களில் இருந்து மீட்டு, பாதுகாத்து பேண முடிகிறது என்ற உண்மையின் அடிப்படையில், இராமருக்கு உதவிய அணிலைப் போல, நூரி தோட்டத்து தேவஸ்தான வருடாந்த விழாவில் இரண்டு நாள் அன்னதானத்தை பொறுப்பேற்பது என்று இம் மன்றம் தீர்மானித்தது.

இந்த ஆலய அறங்காவலரும் தெரணியகலை நூரி ஸ்டோர்ஸ் வர்த்தக நிலைய உரிமையாளருமான ஏ. கணேசனுடன் தொடர்புகொண்ட போது, ஆலய திருவிழா செப்டெம்பர் 22ம் 23ம் திகதிகளில் நடைபெறுவதாகச் சொன்னார். சுமார் எட்டடி உயரம் கொண்ட புற்றை கருவறையில் கொண்ட சுமார் எண்பது வருட பழைமையான முத்துமாரியம்மன் கோவிலையும் கூட்டிச் சென்று காட்டினார். பிற்பட்ட பகுதியில் அமைந்திருக்கும் நூரி தோட்ட மக்களின் வாழ்நிலை பற்றியும் எடுத்துச் சொன்னார்.



சுமார் எட்டடி உயரம் கொண்ட புற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாடசாலை அதிபர் ராஜ்குமார்

இரண்டு டிவிஷன்களைக் கொண்ட நூரி தோட்டத்தில் சுமார் 500 குடும்பங்கள் வாழ்கின்றன. பெரும்பாலான தொழிலாளர்கள் போதிய வருமானத்துக்காக வெளியிடங்களில் வேலைக்குச் செல்ல, படித்தவர்கள் கொழும்பு, கண்டி போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டனர். குறைவான குடும்பங்களே தோட்டத்தில் பணிபுரிகின்றனர். இக்கோவில் சார்ந்த பகுதியும் கைவிடப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது.

இத்தோட்டத்தின் நூரி தமிழ்ப் பாடசாலையில் 9ம் ஆண்டுவரை வகுப்புகள் உள்ளன. 180 மாணவர்கள் வரவுப் பதிவில் உள்ளனர். அதிபர் உட்பட ஒன்பது ஆசிரியர்கள். ஆறு வருடங்களுக்கு முன்னர் பாடசாலையை பொறுப்பேற்ற அதிபர் ராஜ்குமார் இந்த ஊர்க்காரர்.

இவர் இங்கு வந்தபோது நூறு மாணவர்களும் ஒரு ஆசிரியருமே இருந்தனராம். புலமைப்பரிசில் தேர்வில் 130 புள்ளிகள் எடுக்கும் வகையில் ஒரு முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறது என்கிறார்.

இந்தப் பின்னணியைக் கொண்ட நூரி தோட்டத் திருவிழாவில் அடியாருக்கு வயிறும் மனமும் குளிர அன்னதானம் செய்வதே சரியானது என்று முடிவெடுக்கப்பட்டது. அறங்காவலர் ஏ. கணேசன் எமது நோக்கம் செவ்வனே நிறைவேற முழு ஒத்துழைப்பு தந்தார். சாதத்துடன் பருப்பு சாம்பார், கிழங்கு பிரட்டல், கடலை – கத்தரிக்காய் கூட்டு, வட்டக்காய் பிரட்டல், பருப்பு வடை, ரசம், அப்பளம் – மிளகாய் பொரியல் மற்றும் பாயாசத்துடன் சுமார் 650 பேருக்கு இரண்டு தினங்களுக்கு, 22ம் திகதி சனி மற்றும் 23ம் திகதி ஞாயிறு, அமுது படைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வெற்றிகரமாகவும், எதிர்பார்ப்பைவிட அதிக நிறைவை எமது உறுப்பினர்களுக்கு தருவதாகவும் இக்கைங்கர்யம் நிறைவு பெற்றது.

மன்ற உறுப்பினர்களோடு தினகரன் பிரதம ஆசிரியர் எஸ். தில்லைநாதனும் வருகை தந்திருந்தார். பால்குட பவனி, அஷ்டோத்ர சத சங்காபிஷேகம், வேட்டைத் திருவிழா நிறைவுபெற, மகேஸ்வர பூஜை) பின்னர் 22ம் திகதி அன்னதானம் ஆரம்பமானது. வருகை தந்திருந்த மன்ற உறுப்பினர்கள் பம்பரமாகச் சுழன்று அடியார்க்கு பரிமாறும் வேலைகளைச் செய்தமை குறிப்பிடத்தக்கது.


சிவபாக்கியம்


இங்கே அமுது உண்ட 63 வயதான சிவபாக்கியம், உணவு கல்யாண சாப்பாடு போல இருந்ததாகவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அம்பாளின் அருள் மென்மேலும் கிடைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டதோடு அடுத்த வருஷம் இதைவிட உன்னதமாக செய்வதற்கு ஆசீர்வாதம் கிடைக்கட்டும் என்று சொன்னார்.

"சாப்பாடு ருசியா இருந்தது; குறையேதுமில்லை... அப்புறம் சாமி சோறை குறை சொல்ல நாங்க யாரு?" என்றார் மற்றொரு அம்மாள்.

"எவ்வளவு சாப்பிட்டோம்கிறது இல்லை பிரச்சினை... சாமி சோறை ஒரு பிடி சாப்பிட்டாலும் வயிறு நிறைஞ்ச மாதிரித்தான்" என்றார் இன்னொருவர்.

அடியார்களுக்கு திருப்தியான சாப்பாடு. லேக்ஹவுஸ் இந்து மன்றத்தினருக்கு முழுமையான மனத் திருப்தி. அன்னதான வைபவம் முடிவடைந்து லேக்ஹவுஸ் இந்து மன்றத்தினருக்கு நன்றி தெரிவிக்கும் உரையை நூரி முத்துமாரியம்மன் பிரதம குரு சிவ ஸ்ரீ தா. செல்வேந்திரன் குருக்கள் நிகழ்த்திய போது கோவிலுக்கான குடை, பஞ்சாலத்தி என்பன அவசியத் தேவையாக இருந்தும் அவற்றை எப்படிப் பெற்றுக் கொள்வது என்பது தெரியா மல் தவித்துக் கொண்டிரு ந்ததாகத் தெரிவித்தார்.



"இச் சந்தர்ப்பத்தில் தான் அம்பாளே லேக்ஹவுஸ் இந்து மன்றத்தினரைத் தூண்டி தனது திருவருள் மூலம் இவற்றை எமக்கு நாம் கேட்காமலேயே பெற்றுக் கொடுத்திரு க்கிறாள் என்று நாங்கள் பரிபூரணமாக நம்புகிறோம்" என்று கூறிய போது அங்கிருந்த மன்ற உறுப்பினர்கள் மனமுருகி அம்பாளின் கடாட்சம் வேண்டி நின்றனர்.

இதனைத் தொடர்ந்து லேக்ஹவுஸ் இந்துமன்றத்தின் தலைவர் கே. அசோக்குமார் ராஜா சிறப்புரையாற்றியதுடன் மன்றத்தின் செயலாளர் கே.ஈஸ்வரலிங்கம் நன்றியுரையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லேக்ஹவுஸ் இந்து மன்றப் பணிகள்

கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை


கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக லேக்ஹவுஸ் இந்து மன்றம் குறிப்பிடக்கூடிய அளவு பணிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றது. தனித்து சமயப் பணி என்றில்லாது சமூகப் பணியையும் இணைந்துச் செய்துவருவது முன்மாதிரியான செயலாகும். சமூகம் அடிப்படைவசதிகள் உள்ளதாக இருந்தால்தான் அங்கு சமயப் பணிகள் பயன்படும். சமூகத்தை மேம்படுத்தாமல் செய்யப்படும் சமயப் பணிகள் விழலுக்கிறைத்த நீர் போலாகும் என்ற உண்மையை உணர்ந்து சமயப் பணியைச் சமூகப் பணியூடாகச் செய்வது உண்மைப் பயனைத் தரும் என்பது அனுபவ உண்மை.

லேக் ஹவுஸில் வேலை பார்க்கும் இந்து ஊழியர்கள் ஒன்றுசேர்ந்து ஜனநாயக முறையில் இந்து மன்றத்தை அமைத்து காலத்துக்குக் காலம் புதியவர்களையும் இணைத்துச் சமய சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்ற வரலாறுகளைப் பார்க்கும் போது மனதுக்கு மகிழ்ச்சியாய் இருக்கின்றது.

நவராத்திரி காலத்தில் கலைமகள் விழா நடத்தி மலர் வெளியிடுவது, நிறுவுநரின் பிறந்த நாளிலும் பின் அமரத்துவமான நாளிலும் விசேட பூசை வழிபாடுகள் பிரார்த்தனைகள் செய்வது, சமய சமாதானக் கருத்தரங்குகளைச் செய்வது, மாணவர்க்குக் கல்வி ஊக்குவிப்புகளை வழங்குவது, மக்களுக்கு அன்னதானம் வழங்குவது, திருத்தல யாத்திரைகள் மேற்கொள்வது, மன்ற உறுப்பினர்களுக்குச் சகாய நிதி வழங்குவது, பொங்கல் பூஜை விழாக்கள் நடத்துவது, போன்ற பரந்துபட்ட சமூக சமய சேவைகளை இடையீடின்றித் தொடர்ந்து செய்துவருவது போற்றுதலுக் குரியது.

இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களைச் சேர்ந்தவர்கள் சேர்ந்து பணிபுரியும் நிறுவனத்தில் ஒருவருடைய சமயத்தை மற்றவர்கள் புரிந்துகொள்ளவும், ஒருவர்க்கொருவர் குரோதம் கொள்ளாமல் பரஸ்பர புரிந்துணர்வுடன் வாழவும் சமய சமாதானக் கருத்தரங்குகள்





லேக்ஹவுஸ் இந்துமன்றம் வெளியிட்ட 'பஞ்சபுராண தோத்திரத்திரட்டு' நூல்களை பல்வேறு அறநெறிப்பாடசாலைகளுக்கு கையளிக்கப்படுவதைப் படங்களில் காணலாம்

பெரும்பயன் தரவல்லன. பத்திரிகை நிறுவனம் ஆதலால் இச்செய்திகள் வெளிவரும் போது அது லேக்ஹவுஸ் நிறுவனத்தினர்க்கு மட்டுமன்றி நாட்டில் வாழும் அத்தனை மக்களும் சமய சமாதான வாழ்வு வாழ்வதற்கு உதவுவதாகும்.

நவராத்திரி காலம் சிவராத்திரி, மற்றும் புண்ணிய காலங்களில் இந்துமன்றத்தினர் சைவாலயங்கள், மன்றங்களில் கூட்டுப் பிரார்த்தனை, பஜனை பூசை வழிபாடுகள் செய்து வருவது அனைவரையும் சமய வாழ்வில் ஈடுபடுத்தவல்லசெயல் எனலாம்.

செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கிணங்கத் தாம் தொழில் செய்யும் நிறுவனத்தை நிறுவியவரின் பெருமையை உணர்ந்து அவரின் பிறந்த நாளிலும் பின் நினைவு நாளிலும் விசேட பூசை வழிபாடு பிரார்த்தனை செய்தல் மனித வாழ்வில் நன்றிணர்வை மேம்படுத்தவல்ல செயல் ஆகும்.

கல்வியும், கலையும் தான் மனிதனை மனிதனாக வாழ வைக்கின்றன. இதற்குரியதான நவராத்திரி காலத்தில் ஆங்காங்கு வழிபாடுகள், விழாக்கள், போட்டிகள், பரிசளிப்புகள், மலர் வெளியீடுகள் என்பவற்றை நடத்தி வருவதைக் காணமுடிகிறது. இப்பண்புதான் ஏனைய பரந்துபட்ட பணிகளைச் செய்வதற்கு ஊற்றுக்கண்ணாய் அமைகிறது எனலாம். ஜலதீபம் எனும் மலர் மூலம் இதுவரை செய்த பணிகளின் வரலாறுகளை அறிய முடிகிறது. அதன் மூலம் மேலும் புதிய பணிகளுக்குத் திட்டமிடவும் அதில் புதியவர்கள் பலர் இணைந்து கொள்ளவும் முடிகிறது. சமயக் கட்டுரைகள் மற்றும் செய்திகள் மூலம் மக்கள் நமது சமய வாழ்வைப் புரிந்துகொண்டு வாழவும், தாமும் பணிகள் செய்யவும் வழி ஆகின்றது. பத்திரிகை நிறுவனம் ஆதலால் கட்டுரைப் போட்டிகள் மூலம் பல எழுத்தாளர்களை உருவாக்கவும் முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுக்கொருமுறை குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து தல யாத்திரைகள் செய்வதால் குடும்பங்களுக்கிடையேயான உறவு பலப்படவும் வெளியுலக நடைமுறைகளைக் கண்டுகளித்துப் பரந்த மனப்பான்மையுடனும், புரிந்துணர்வுடனும் வாழவும் வழிகாட்டலாக அமைகிறது.

'கல்விக்குக் கைகொடுப்போம்' எனும் உயர்ந்த தாரகமந்திரத்தை ஆதாரமாகக் கொண்டு காலத்துக்குக் காலம் வசதிவாய்ப்புகள் குறைந்த பிரதேசங்களில் உள்ள மாணவர்க்குப் புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகளை நடத்துதல், கல்வி உபகரணங்கள் வழங்குதல், நிவாரணக் கிராம மாணவர்களைத் தேடிச் சென்று அவர்களுக்கு வேண்டுவன செய்தல், அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில் நிதி வழங்குதல் முதலான கல்விப் பணிகள் எதிர்காலத்தில் நல்லதோர் கல்விச் சமூகத்தைக் கட்டி எழுப்புதற்குரிய பணியாகும்.

தன்னைக் கண்டு தானம் செய் என்பதற்கேற்ப மன்ற அங்கத்தவர்களுக்குத் தேவைகள் ஏற்படுகின்ற போது சகாய நிதியுதவி செய்வதும் வரவேற்கத்தக்க பணி என்பதில் ஐயம் இல்லை.

ஏழைகளின் வயிறுதான் நாம் அடுத்த பிறப்புக்குக் கொண்டு செல்லும் புண்ணியத்தின் வைப்பிடம், (உண்டியல்) என்று எங்கள் சமயங்கள் எல்லாம் சொல்கின்றன. அதனை மெய்ப்பிக்கும் வகையில் காலத்துக்குக் காலம் பல பிரதேசங்களைத் தேடிச் சென்று ஆங்காங்குள்ள ஆலயங்களில் அவர்களைக் கூட்டி வழிபாடு செய்ய செய்து வயிறாரச் உணவளித்தல் மிக உச்சமான பணியாகும்.

இந்தப் பணியின் தொடர்ச்சியாக இவ்வாண்டு தெரணியகலை 1ம் பிரிவு நூரித் தோட்டம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலில் இவ்வருடம் செப்டெம்பர் 22, 23 ஆம் திகதிகளில் விசேட பூசை வழிபாடும் பெருந்திரளான அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டமை மிகப் பாராட்டுக்குரிய பணியாகும்.

'அர்ச்சனை பாட்டேயாகும்' என்பதற்கேற்ப நமது சமயத்தைச் சேர்ந்தவர்கள் அருளாளர்களின் அருட்கொடையான பஞ்சபுராணத்தைப் பொருளுணர்ந்து பாடி வழிபாடு செய்வதற்கு வாய்ப்பாகப் பஞ்சபுராணத்திரட்டு எனும் நூலைப் பொருளுடன் வெளியிட்டிருப்பது போற்றுதலுக்குரியது. அதனை அறநெறிப் பாடசாலைகள் ஊடாகவும், மற்றும் சமய மன்றங்கள், வெளிநாட்டு மன்றங்கள் ஊடாகவும் பலரும் பயன்கொள்ள வைத்த செயற்பாடு எல்லாப் பணிகளுக்கும் சிகரம் வைத்தாற் போன்றதாகும்.

மேலும் பஞ்சபுராணத்திரட்டு இரண்டாயிரம் பிரதிகள் வெளியிட்டு வழங்கவுள்ளமை அறிந்து போற்றாதிருக்க முடியாது.

நாட்டுக்கு முன்மாதிரியான லேக்ஹவுஸ் இந்து மன்றத்தின் சமூக சமயப் பணிகள் மேலோங்க இறைதுணை கொண்டு வாழ்த்துகின்றோம்.

## லேக்ஹவுஸ் இந்து மன்ற அங்கத்தவர்கள்

**தினகரன் ஆசிரியர் பீடம்**

01. எஸ். தில்லைநாதன்
02. க. குணராசா
03. கே. அசோக்குமார் ராஜா
04. எஸ். பாண்டியன்
05. கே. ஈஸ்வரலிங்கம்
06. லக்ஷ்மி நாகதர்ஷன்
07. எஸ்.நாகேஸ்வரன்
08. வ. சிவஜோதி
09. க. இதயபவன்
10. எம். பிரசாத்

**வாரமஞ்சரி ஆசிரியர் பீடம்**

11. ரி. செந்தில்வேலவர்
12. விசு கருணாநிதி
13. பி. வீரசிங்கம்
14. வாசுகி சிவகுமார்
15. ஏ. பரசுராமன்

**வண்ணவானவில் ஆசிரியர் பீடம்**

16. எஸ். கிருஷ்காந்தன்
17. எம். ஸ்ரீகாந்த்

**தினகரன் ஒப்புநோக்காளர் பிரிவு**

18. என். யோகரஞ்சன்
19 என். பவானந்தன்
20. ரீ. சுஜீவன் சர்மா
21. எஸ். ஸ்ரீகாந்த்
22. எஸ். சுரேஷ்ராஜ்

**தருணி ஆசிரியர் பீடம்**

23. ஏ. ரவிரத்னவேல்

**ஆசிரியர் பீட கணனிப் பிரிவு**

24. கே. ஆர். சிவகுமார்
25. கே. நிரஞ்சன்
26. எம். ராஜன்
27. எஸ். ருக்மணிகாந்தன்

**உற்பத்திப் பிரிவு**

28. எஸ்.எம். விஸ்வகாந்தன்
29. எஸ்.எம். பிரேம்குமார்

**தகவல் தொழிநுட்பப் பிரிவு**

30. பி. நாகஇளந்திரையன்

**விநியோகப் பிரிவு**

31. ஆர். கே.ஜெயகுமார்

**லேக்ஹவுஸ் யாழ் கிளை அலுவலகம்**

32. ரி. கணேசராஜா

**தினகரன் விளம்பர அநுபந்தப்பிரிவு**

33. கே. உதயகுமார்


**அலுவலக உதவியாளர் பிரிவு**

34. பாக்கியலக்ஷ்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Significance of Navratri



Navratri, as the name suggests, means nine nights. It is one of the important Hindu festivals. It is dedicated to the worship of Goddess Durga, the deity of Power. Like other festivals of India, Navratri also has a significance and meaning attached to it. Each day of the nine-day festival are dedicated to the worship of different forms of Goddess Durga, which unfolds the religious importance of the occasion. Go through the following lines to know more about the significance of Navratri festival.

**The First Three Days of Navratri**

The first three days of Navratri are devoted to the worship of the Goddess Durga. This is the period, when her energy and power are worshipped. Each day is dedicated to a different appearance of Durga. Kumari, which signifies the girl child, is worshipped on the first day of the festival. Parvati, who is the embodiment of a young woman, is worshipped on the second day. The destructive aspects of Goddess Durga symbolize the commitment to acquire triumph over all the evil tendencies. Hence, on the third day of Navratri, Goddess Kali is worshipped, who represents the woman who has reached the stage of maturity.

**Fourth to Sixth Days of Navratri**

When a person acquires triumph over evil tendencies of ego, anger, lust and other animal instincts, he/she experiences a void. This void is filled with spiritual wealth. For the purpose, the person approaches Goddess Lakshmi, to acquire all the materialistic, spiritual wealth and prosperity. This is the reason why the fourth, fifth and sixth day of Navratri are dedicated to the worship of Lakshmi - the goddess of prosperity and peace.

Although the individual has acquired victory over evil tendencies and wealth, he is still deprived of true knowledge. Knowledge is required to live the life of a humane, even though he/she is prospered with power and wealth. Therefore, Goddess Saraswati is worshipped on the fifth day of Navratri. All the books and other literature materials are gathered in one place and a 'diya' (earthen lamp) is lit in front of the deity, to invoke the goddess and seek her blessings. Till the time the books are kept at the puja room, the students would not study.

**Seventh and Eighth Day of Navratri**

The seventh day is dedicated to worshipping Saraswati, the goddess of art and knowledge. Prayers are offered with an aim to seek spiritual knowledge. A 'yagna' is performed on the eight day. This comprises of a sacrifice honoring goddess Durga as well as bids her farewell. The sacrifice or offering is made out of clarified butter (ghee), rice pudding known as kheer and sesame seeds.

**Ninth Day of Navratri**

The ninth day is the final day of Navratri celebrations. It is also known as 'Mahanavami'. On the day, Kanya puja is performed to worship nine young girls, who have not yet reached the stage of puberty. These nine girls symbolize one of the nine forms of goddess Durga. The feet of girls are washed to welcome the goddess and show respect to her. The girls are offered a set of new clothes as a gift from the devotees at the end of the puja.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සරස්වති, ලක්ෂ්මි හා භද්‍රකාලී



බෞද්ධ සංස්කෘතියේ දී දේව විශ්වාසය හා ඇදහීමක් පවතී. ඒ අතර සරසවිය, ලක්ෂ්මි දෙදෙනා මහත් ගෞරව පුරස්සරව අදහන දේවත්වයෙහි ලා සැළැකේ. සරසවිය ඉගෙනීමට දක්‍ෂතාවයට ප්‍රමුඛ වෙයි ලක්ෂ්මි වාසනාවට සෞභාග්‍යයට ප්‍රමුඛ වෙයි. කෙනෙකුගෙන් වරදක් අරියාදුවක් අසාධාරණයක් වූ විට ඒ ගැන පැමිණිලි කරන්නේ භද්‍රකාලී මෑණියන්ටය. එහෙයින් භද්‍රකාලි මව පිළිබඳ ඇදහීමකුත් වේ.



සරස්සවි දේවිය නිසා සරස්වති යෝගයක් ද යෙදේ. සරස්සවි යන්නෙහි අදහස ස්වර + සවිය හෙවත් වචනයට අධිපති යන අර්ථයක් වෙතැයි සළකනු ලබන අතර සතර සවිය සරසවිය වූයේයි පිළිගන්නා පිරිසක් ද වේ. වචනය, දැනුම, සිහිය, කලාත්මක බව යනු ඒ සතර සවියයි. සරස්වති දේවියගේ චිත්‍රය ඇඳ ඇත්තේ ද අත් සතරකින් යුතුවය. එය ද ශක්ති හතරකට උපමා කෙරෙයි. එසේම ඒ අත් හතරේ පොතක්, නවගුණ ඇටවලින් සැදි මල්දමක් වීණාවක් හා ගිරවකු ද චිත්‍රගත කර ඇත. ගිරවාගෙන් වාග් චාතුර්යයත්, ඇට වැලෙන් පිවිතුරු කල්පනාවත්, පොතින් දැනුමත් හා වීණාවෙන් සෞන්දර්යයත් නිරූපණය වෙතැයි කියැවේ.

සරසවිය නිසා ශිල්ප හැදෑරීම සඳහා උචිත ප්‍රබල නැකතක් ද යෙදෙතැයි ජ්‍යොතිෂයේ සඳහන් වේ. සරසවි යෝගය යෙදෙන්නේ මෙසේ ය.

ගුරු, සිකුරු හා බුද යන තිදෙන ලග්නය, දෙවැන්න හා සිව්වැන්න, පස්වැන්න, සත්වැන්න, නව වැන්න හා දස වැන්න යන ස්ථායන් හි එකට හෝ වෙන වෙනම හෝ දෙදෙනකු තැන්පත් විය යුතු අතර එහිදී ගුරු සිටිනුයේ උච්චව හෝ ස්වක්ෂේත්‍රව විය යුතු ය.

එසේ සරස්වතී යෝගය යෙදුණු විට හොඳට ඉගෙනීමත්, වාග් ශක්තියත්, බහුශ්‍රැතකමත් ලැබේ. මේ යෝගය ඇතිව උපන්නා කවියෙකි. අභිමානනීය කලාකරුවෙකි. හැම ශාස්ත්‍රයකම උගතෙකි උගත්කම හා නිපුනත්වය ඇත්තෙකි. කුසලතා පිරිපුන්ය. පොහොසත්ය. හෝරා ශාස්ත්‍රය ආදි ශිල්පයන්හිද නිපුනයෙකි. ප්‍රශංසාවට ලක් වන්නෙකි. යහපත් බිරිඳක් හා දරුවන් ද ලබයි. සොඳුරු සිතිවිලි නිබඳවම සිතෙහි රඟ දෙයි.



ජ්‍යොතිෂයේ දැක්වෙන ලක්ෂ්මි යෝගයද වාසනාවන්ත එකකි. ලක්ෂ්මි යනු විෂ්ණු දෙවියන්ගේ ආර්යාවය. ලක්ෂ්මි යෝගය යෙදෙන්නේ මෙසේ ය.

ලග්නාධිපතියා බලවත්ව සිටියදී නවය අධිපතියා කේන්ද්‍රස්ථානය හෝ ත්‍රිකෝණස්ථානයක උච්චව නැතොත් ස්වක්ෂේත්‍රව සිටීම ලක්ෂ්මි යෝගයයි. එම යෝගය ලද පුද්ගලයාට සිත් පැහැරගන්නා රූ සපුවක් වෙයි. අවංක;කනෙකි.

කීර්තිමත් පාලකයෙකි. රාජකීය නායකයෙකි. බොහෝ ධන ධාන්‍ය සම්පත් ඇත. උදාරය, උගත්ය. රාජ්‍ය බුහුමන් ලබයි. සුව පහසුව ලබයි.

භද්‍රකාලී මෑනියන් නමට යෝගයක් නැත. කාලි මෑණියෝ දඬුවම් දීමෙහි ලා උත්සුක වෙති. කාලි මෑණියන්ගෙන් පළමුවෙන් පිහිට යැදුවේ යමෙකු ද ඔහුට පිළිසරණ වේ. කෙනෙකු වරදක් කර මා දඬුවමෙන් මුදා ගන්නැයි මුලින්ම ඉල්ලා සිටියේ ඔහු නම් ඔහුට පිළිසරණ වේ. කාලි මෑණියන් පිළිබඳ පරිච්ජේද කීපයක ලියන්නට තරම් කරුණු වෙයි.

ආචාර්ය, පියසේන රතුවිතාන




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியாவில் ஆயிரத்துநூறு ஆண்டு பழைமையான இந்துக் கோயில் கண்டுபிடிப்பு

**9ம் நூற்றாண்டு சோழரின் வரலாற்று படைப்புகள்**


**அதிசயம் ஆனால் உண்மை!**



இந்தோனேசியாவில் ஜாவா தீவில் ஆயிரத்து நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த இரண்டு இந்துக் கோவில்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இந்தோனேசியாவில் இஸ்லாமியப் பல்கலைக்கழகம் கட்டுவதற்காக நிலம் தோண்டப்பட்டபோது இக்கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஜாவாவில், யோக்யகர்த்தா என்ற இடத்தில் உள்ள இந்தோனேசிய இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தின் அருகில் உள்ள இடத்தில் நூலகம் அமைப்பதற்காக, 2009 டிசம்பர் மாதம் வேலைகள் தொடங்கின. அத்திவாரத்துக்காக மண் தோண்டும் போது, கல்சுவர் தென்பட்டது. அரச தொல்பொருள் துறையினர் இதைக் கேள்விப் பட்டு நேரில் வந்து களப்பணியில் ஈடுபட்டனர்.







தொடர்ந்து 35 நாட்களாக நடந்த அகழ்வாய்வில், 1,100 ஆண்டுகளுக்கு முந்தைய இரண்டு சிறிய கோவில்கள் வெளிப்பட்டன. முதல் கோவில் ஆறு மீட்டர் நீள உயரத்துக்கு அமைந்துள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட இந்துக் கோவிலில் இந்து மத வழிபாட்டுச் சின்னங்களும் உள்ளன.

விநாயகர் சிலை, லிங்கம், யோனி பீடம், பலிபீடம் என்பன கண்டுபிடிக்கப்பட்டன. இவையனைத்தும் சேதம் அதிகமில்லாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கோவிலின் அருகில் ஒரு நதி ஓடுகிறது. கோவிலுக்கு வடக்கில், 12 கி.மீ. தூரத்தில் மெரபி என்ற எரிமலை இருக்கிறது.

இந்தக் கோவில் கட்டப்பட்ட 100 ஆண்டுகளுக்குள் இந்த எரிமலையிலிருந்து வெளிப்பட்ட தீக்குழம்பு அருகிலுள்ள நதியின் வழியாக வந்து இந்தக் கோவிலை மூடியிருக்கலாம்; அதனால் தான் இந்தக் கோவில் பெருமளவில் எந்தப் பாதிப்பும் இல்லாமல் இருக்கிறது என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்த சிலைகள் அனைத்தும் தொல்பொருள் அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

தொல்பொருள் ஆய்வாளர்களின் தகவல்களின்படி ஆயிரத்து நூறு ஆண்டுகள் பழைமைவாய்ந்த இக்கோயில் சோழர் காலத்தில் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது.

ராஜராஜசோழனின் மகன் ராஜேந்திர சோழன், மலேசியாவிலுள்ள கடாரத்தை வென்று, "கடாரம் கொண்டான்" என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டான்.

மேலும் அவன் முன்னேறி இந்தோனேசியாவிலுள்ள சில தீவுகளையும் வென்றான் என்பது வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிப் பாடசாலையின் முக்கியத்துவம்

இந்து சமயத்துக்கு தொடக்க காலம் கூறுவதானால் அது யாரோ ஒருவரால் ஏதோ ஒரு காலத்திலே தோற்றுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் அது எவராலேனும் எக்காலத்திலேனும் தோற்றுவிக்கப்படாமையால் அதற்கு தொடக்க காலம் இல்லையாம்.

சிவ பெருமான் எங்கும் உள்ளவர், என்றும் உள்ளவர், உயிர்களும் என்றும் உள்ளவை. என்றும் உள்ள சிவவெருமானை என்றும் உள்ள உயிர்கள் அடைந்து பேரின்பம் அனுபவிப்பதற்கான வழியும் என்றும் உள்ளது. அந்த வழியிலான சமயம் இதுதான். சிவ சமயம்- சிவத்தை அடைவிக்கும் சமயம் சைவ சமயம். ஆதலால், சைவ சமயம்



யாழினி நந்தகுமார்...

என்றும் உள்ளது, அநாதியானது, எவராலும் தோற்றுவிக்கப்படாதது என்பது தெளிவாம்.

சைவ சமயத்தின் பெருமையினையும், அருமையினையும் சிறு பராயத்திலேயே அறநெறி பாடசாலையினூடாக சிறு பிஞ்சுகளிடையே சமயத்தின் பற்றினை அடைய வைப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும்.

அறியாப் பருவத்தும் அறியும் பருவத்தும் குழந்தையைப் பேணும் தாய் போலவே அறநெறிப்பாடசாலைகள் சைவசமயத்தின் பெருமையினை அறியாப் பக்குவத்திலும் அறியாத் தருவாயிலும் அறியும் பக்குவத்தில் அறியச் செய்கின்றன. உலகத்து மக்களை தீட்சை வழியால் தன் வசப்படுத்துவதற்கு திருவருள் தாங்கி வரும் மானிடப் போர்வையே குரு என்பதை உலகினர் அறியார். அக்குருக்கலாலேயே அறிநெறிப் பாடசாலையில் சைவ சமயம் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

அறநெறிக் கல்வியினூடாக சிறுவர்களுடைய சமயம் சார் அறிவைப் பெருக்குவதோடு யோகா பயிற்சியினூடாக சிறுவர்களுடைய இச்சையை பண்படுத்துவது; சிறுவர்களுடைய மன அமைதியையும் சாந்தியையும் ஆன்ம வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அளிப்பதாக யோகா பயிற்சிகள் பயிற்றப்படுகின்றன.

அத்துடன் பூர்வீக காலத்திலிருந்து வேதம், யோகம் போன்றவற்றை கற்பிக்கும் போது குருவின் முன் அமர்ந்து சாதனையின் துவக்கத்திலும் முடிவிலும் இறைவனை பிரார்த்திப்பது வழக்கம். யோகப் பயிற்சியின் போது மனம், வாக்கு, காயம் இவை மூன்றினையும் பெருங்கிணைத்து செயற்பட வேண்டும். இதற்கு பல வகையில் அலைபாயும் மனதினை கட்டுப்படுத்த வேண்டும். மனதை கட்டுப்படுத்தி ஒரு நிலைக்கு கொண்டு வர யோகாசனம் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

அறநெறிப் பாடசாலைகள் பயிற்றப்படுகின்ற மந்திரங்களின் ஆற்றல் மிக்க ஒலி அலைகள் மனதை ஒரு நிலைப்படுத்தவும் அமைதிப்படுத்தவும் தூய்மைப்படுத்தவும் உதவுகிறது. அவ்வாறே மனதை ஒரு நிலைப்படுத்தும் போதே இறைவனை நாம் காண முடியும். ஆனால் தனி மனித வேண்டுதலை விட கூட்டு பிரார்த்தனையில் நாம் கூடிய பயனை பெற்றுக் கொள்ள முடியும் அதன் வெளிப்பாடாக பஜனை நிகழ்வினையும் வழங்கி வருகிறார்கள்.

யோகத்தில் யோகமானது தியானமாம்; யோகத்தில் ஞானமானது மனதை பரம் பொருளோடு ஐக்கியப்படுத்தி நிறுத்துதலாம். அவ்வாறே அறநெறிப் பாடசாலை மாணவர்களும் தியான வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றனர். இத் தியானத்தினூடாக வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, யாதுமாகி நிற்கும் இறைவன் எங்கும் நிறைந்தவராகிறார் என்பது இந்து சமய தார்ப்பரியம். தியான வழிமுறையினூடாக இறைவனின் அருகாமையினை மாணவர்கள் உணர்கிறார்கள்.

மெய்மலர்ந்து, கண் மலர்ந்து, வாய் திறந்து, தலை தாழ்ந்து வேண்டினால் உள்ளம் குளிர்ந்து இறைவன் அடியார் வேண்டும் வரம் தருவார். அந்த வகையில் தேவாரம், பஞ்ச புராணம் என்பனவும் பயிற்றுவிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சைவ சமயத்தின் பெருமையினையும், அருமையினையும் சிறு பராயத்திலேயே அறநெறி பாடசாலையினூடாக சிறு பிஞ்சுகளிடையே சமயத்தின் பற்றினை அடைய வைப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும். அறியாப் பருவத்தும் அறியும் பருவத்தும் குழந்தையைப் பேணும் தாய் போலவே அறநெறிப்பாடசாலைகள் சைவசமயத்தின் பெருமையினை அறியாப் பக்குவத்திலும் அறியாத் தருவாயிலும் அறியும் பக்குவத்தில் அறியச் செய்கின்றன."**

நவ என்ற சொல்லிற்கு ஒன்பது, புதியது என்று இரண்டு அர்த்தங்கள் உள்ளன. ஒன்பது ராத்திரிகள் என்பதே நவராத்திரி. அவ் நவராத்திரி காலங்களில் விசேடமான பிரார்த்தனைகள், விழாக்கள், மாணவர்களிடையிலான தேர்வுப் போட்டிகள் மற்றும் சான்றிதழ் நிகழ்வுகள், பாத பூஜைகள் என்பனவும் நடைபெற்று வருகின்றன.

ஔவையார் என்ற பெண் புலவர் கடைச் சங்ககாலத்தில் வாழ்ந்தவர். அவர் படைத்த இலக்கியங்கள் அக நானூறு, புறநானூறு போன்ற சங்க நூல்களில் காணப்படுகின்றன. அவரது படைப்புக்களான ஆத்தி சூடி, வாக்குண்டான் நல்வழி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, கல்வி ஒழுக்கம் போன்றன மிகச்சிறந்த படைப்புக்களாகவும் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டனவாகவும் காணப்படுகின்றன.

இவ் நூல்கள் எந்த சமூகத்தையும் சாராமல் அனைத்து மக்களுக்கும் ஒழுக்க நெறியைப் போதிக்கக் கூடிய நூல்களாக விளங்குகின்றன. மேலும் இன மதபேதமின்றி தமிழ் கல்வியாளர்கள், அறிஞர்கள் அனைவரதும் பாராட்டை பெற்ற படைப்புக்களாக விளங்குகின்றன.

இந்நூல்களில் காணப்படும் விடயங்கள் வாழ்வின் பல்வேறு கோணங்களிலும் கட்டுப்பாடு, குடும்ப வாழ்வு, சமூக இயைபு போன்ற அனைத்திற்கும் வழி காட்டுவனவாகவுள்ளன. மேலும் ஔவையாரது பாடல்கள் ஒழுக்கம், செல்வம், அன்பு போன்ற நன்னடத்தைகளை விளக்குவதோடு வாழ்வின் எந்நிலையிலும் தார்மீக விழுமியங்களைப் பின்பற்றக்கூடிய விடயங்கள் அடங்கியுள்ளன.

ஒரு மரம் நிலை பெறுவதற்கு உறுதியான வேர்கள் அவசியம். அது போன்றே மாணவர்கள் சிறந்த நிலை அடைவதற்கு பண்பு வளர்ச்சி அத்தியாவசியமாகிறது. மனம், வாக்கு, காயம் சிறந்த விதத்தில் வளர்ச்சியடைய வேண்டும்.

எண்ணங்கள், விதைகள் போன்றவை. ஒரு சிறிய விதையினுள்தான் ஒரு பெரிய ஆலமரமே உறங்கிக் கொண்டிருக்கிறது. விதைக்கப்படும் ஒவ்வொரு எண்ணத்துளிகளும் நிச்சயமாக ஒவ்வொரு விளைவை ஏற்படுத்தத்தான் செய்கின்றன.

நல்ல எண்ணங்களே சான்றோரை உருவாக்குகின்றன. மாணவப் பருவத்தில் பழகிக் கொள்ளும் நற்பழக்க வழக்கங்கள் தான் ஒரு மனிதனுக்கு வாழ்நாள் முழுவதும் வழிகாட்டிகளாக விளங்குகின்றன. அறநெறிப் பாடசாலைகள் என்றும் சைவ சமயத்துக்கு உறுதியான வேர்களாகவே இருக்கின்றன.

சுவாமி விவேகானந்தர் கூறுகையில் 'சமஸ்காரம்' எனும் பதத்திற்கு 'இயற்கையால் அமைந்த மனநிலை' என்று பொருள் கொள்ளலாம். மனம் என்னும் ஏரியில் எழும் சிற்றலைகள் முற்றிலும் மறைந்து போகாமல், திரும்பி வருவதற்கான அறிகுறிகளை விட்டுச் செல்கின்றன.

இவற்றையே சமஸ்காரம் என்று கூறுகின்றோம்.

எண்ணப்பட்ட எண்ணம் ஒவ்வொன்றும் தொடர்ந்து வாழ்கின்றன. அவை தம்மைச் செயல்களாக உருவாக்கிக் கொள்வதற்கு இடையறா முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. சமயம் கிடைக்கும்போது அவை புதிய உருவத்துடன் வெளி வருகின்றன. இத்தகைய ஒவ்வொரு எண்ணமும் எண்ணத்தின் விளைவான ஒவ்வொரு செயலும் மனத்தில் பதிவுகளை ஏற்படுத்துகின்றன.

அவை வெளிப்படையாகத் தெரியாமல் இருந்தாலும், உள் மனதில் நம்மை அறியாமலே விளைவுகளை உண்டாக்கும் அளவிற்கு வலிமை படைத்தமையாகும். நாம் ஒவ்வொரு கணமும் எப்படி என்ன மனநிலையில், எத்திசையில் இருக்கிறோம் என்பதை ஒட்டு மொத்தமான இந்த மனப்பதிவுகளே நிர்ணயிக்கின்றன. இந்த நிமிடத்தில் நான் என்னவாக இருக்கிறேனோ, அது என்னுடைய கடந்த கால சமஸ்காரத்தின் விளைவாக அமைந்ததேயாகும். இதுவே ஒருவனுடைய பண்பு என்று அழைக்கப்படுகிறது. இவ் எண்ண அலைகளை இறைவனை நோக்கியும் நல் எண்ணங்களை நோக்கியும் நற் செயல்களை நோக்கியும் எம்மால் திசைப்படுத்த முடியும். அதற்கு நாம் அறநெறியினை நாடத்தான் வேண்டும்.

ஒரு மனிதன் தொடர்ந்தும் தீயவற்றை கேட்டு தீயவற்றை பார்த்து அவற்றையே சிந்தித்துக் கொண்டிருந்தால், அவன் தீய செயல்களையே செய்கிறான். அவனது மனம் முழுவதும் தீய சிந்தனைகளால் நிரப்பப்படுகிறது. உண்மையில் இத் தீய பதிவுகள் அவனது உள் மனதில் எப்பொழுதும் வேலை செய்தபடியே தீயனவற்றை செய்யத்தூண்டும் வலிமை வாய்ந்த மனநிலையை உருவாக்கும்.

இதன் விளைவாக, அவன் தீயவனாக, கொடியவனாக இருக்கிறான். அவனே நல்லவனாக முயன்றாலும் அவனால் அத்தனை சுலபத்தில் அத்தீய பண்பின் இருந்து விடுபட்டு விட முடியாது. மறுபக்கம், ஒரு மனிதன் தொடர்ந்தும் நல்லவற்றை கேட்டு, நல்லவற்றைப் பார்த்து, நல்ல எண்ணங்களையே எண்ணிக் கொண்டிருந்தால்.

அவன் மனதில் நல்லவையே பதியப் பெறும். அவை நல்ல செயல்களைச் செய்ய அவனைத் தூண்டும். அவனது மனம் முழுவதும் நல்ல சிந்தனைகளால் நிரப்படுகிறது.

இதனால் அவனது உள்ளத்தில் நல்லதையே செய்ய வேண்டும் என்ற தவிர்க்க முடியாத போக்கு உண்டாகிறது. அவனாகத் தீயவற்றைச் செய்ய விரும்பினாலும், நன்மையின் மொத்த வடிவமாகவுள்ள அவனது உள்ளம் அவனை அவ்வாறு செய்யவிடாது. அவன் பூரணமாக நற்சுபாவங்களின் வயப்பட்டு விடுகிறான்.

இவ்வாறு அமையும் போதுதான் ஒரு மனிதனின் சிறந்த பண்பானது முழுமையாக நிர்மாணிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. அறநெறி என்றும் இந்து சமய தாற்பரியத்திற்கு வித்திட்டுக் கொண்டே இருக்கும்.

நன்றி: இந்து ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதிலே துளசி வைத்தல்



உடலில் மிகக் கூடுதலாக உறிஞ்சும் சக்தியுள்ள இடம் நம் காதுகளின் பின் பகுதி தான் என்பது விஞ்ஞானம் கண்டறிந்த ஓர் உண்மை.துளசிச்செடி மருத்துவக் குணங்கள் நிறைந்த ஒரு செடி. சூரிய ஒளி கிடைக்கும் இடத்தில், கிழக்குப் பக்கத்து வாசலுக்கு நேராக துளசி மரம் நட்டு, முடிந்தால் துளசி மாடம் அமைத்து அதை மிக உயர்ந்த கவனத்துடன் வணங்கிப் பாதுகாக்கும் நடைமுறை நம்மவரிடத்தில் இன்றும் இருக்கிறது.

மிகப் பழைய காலம் முதல் மக்கள் இந்தத் துளசிச் செடியின் இலைகளை நாள் தோறும் தம்காதுக்குப் பின்னால் சூடி வைக்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தனர்.

புனிதமான துளசிச் செடியை வளர்க்கும் போது அவதானமாக தெய்வீகமாக இருக்க வேண்டும். மூன்று வேளையும் துளசியை வலம் வந்து வரம் கேட்டல் பயன் தரும். தரையில் நடுவதற்கு கிருஷ்ண துளசி சிறந்த தென்பா. துளசி மாடம் தரையை விட சற்று உயர்ந்த இடத்தில் அமைய வேண்டும்.

முன்னைய சம்பிரதாயத்தோடு துளசி தொடர்பான இன்னொரு செய்தியையும் கூடவே பார்த்துவிடுங்கள். அது தான் துளசி தீர்த்தம்.

கோவில்களிலே புண்ணியஜலமெனப்படும் தீர்த்தம் வழங்கப்படும் பொழுது அதில் கட்டாயமாக துளசியை உபயோகித்த நீரைத் தருவதாகப் பார்த்திருக்கிறோமல்லவா? மருத்துவக் குணங்கள் நிறைந்த துளசி தீர்த்தத்தைப் பற்றி இந்திய கேரளா விஞ்ஞானி உள்ளிட்ட அமெரிக்க விஞ்ஞானிகள் பலர் அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். “கல்ஸ்டாட் வாட்டர்” என்ற பெயரில் மேல்நாட்டவர் கண்டுபிடித்திருக்கும் பரிசுத்த நீருக்கு நிகரானதே துளசி தீர்த்தம் என்று கண்டுபிடித்த விஞ்ஞானிகள், விக்கிரகத்துக்கு அபிஷேகம் செய்து பெறப்படும் துளசி தீர்த்தம் வழங்கும் சம்பிரதாயத்தை வியந்ததோடு, வீட்டிலேயே துளசி தீர்த்தம் தயாரித்து எளியமுறை மருத்துவம் செய்யுமாறும் வலியுறுத்தியுள்ளார்கள். துளசிப்பூவை மாலை நேரத்திலும், ஏகாதசியிலும் செவ்வாய், வெள்ளி நாட்களிலும் பறிக்கலாகாது என்று விதிக்கும் நம்முன்னோர்கள் அதனை பூஜைக்கல்லாமல் வேறு தேவைகளுக்காக பறித்தல் ஆகாது என்றும் கூறியுள்ளனர்.

காதிலே பூக்களைப் பக்தர்கள் சூடிக்கொள்ளும் வழக்கத்தை ஏற்காத நம் சான்றோர்கள், துளசி இலையைக் காதில் சூடுவதால் வரும் பயன்களை அன்றே சொல்லி வைத்த அற்புதம் தான் என்ன. இந்த வழக்கம் நம் சம்பிரதாயத்தின் அங்கமாகிவிட்டது.

நன்றி :- அர்த்தமுள்ள சம்பிரதாயம்

தொகுப்பு :- ஆர். ஐங்கரன்

# 2012 Office bearers of the Hindu Association of Lake House

**Patrons:**

Mr. Bandula Padmakumara
(Chairman)
Mr. S.Thillainathan
(Chief Editor, Thinakaran)
Mr. T. Senthilvelavar
(Chief Editor, Vaaramanjari)

**Consultants:**

Mr. A.Parasuraman
Mr. S.Nageshwaran

**Executive Committee:**

Mr. N.Yogaranjan
Mr. S.M. Premkumar
Mr. S. Krishkanthan
Mrs. Lakshmi Parasuraman
Mr. T. Sujeevan Iyer
Mr. K. Niranjan
Mr. P. Veerasingham
Mr. M. Srikkanthan
Mr. M.Pirasath

| | | |
|---|---|---|
| **President** | : | Mr. K. Ashokkumar Rajah |
| **Secretary** | : | Mr. K. Eashwaralingham |
| **Vice President** | : | Mr. S.Rukmanikanthan |
| **Asst. Secretary** | : | Mr. S. Srikkanth |
| **Treasurer** | : | Mr. S.M. Vishvakanthan |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Lake House Hindu Association

## Annual Highlights - 2012





The Hindu Association commemorated the 126th birth anniversary of the founder of Lake House, D.R. Wijewardene by conducting a pooja at the Siva Subramaniya Swamy temple, Slave Island recently. Here, Director Editorial, Seelaratne Senarath, Chief Editor, *Thinakaran* , S. Thillainathan and members of the Association participate at the ceremony.






The Lake House Hindu Association launched 'Pancha Purana Thoththirath Thirattu' (a compilation of ancient vedic prayers). Here Lake House Director Editorial, Seelaratne Senarath presents the first copy to Director, Hindu Cultural Department, Shanthi Navukkarasan. Chief Editor, *Thinakaran*, S. Thillainathan, compiler *Saivappulavar Kalabooshanam* S. Sellathurai and committee members look on. On right, a cultural item in progress.





The Lake House Hindu Association held a Maheswara pooja (Alms giving) at the Shri Muthmariamman temple at the First Division of Noori Estate, Deraniyagala recently. Here Chief Editor, *Thinakaran* , S. Thillainathan and members of the Association participate at the ceremony. On right, members of the Hindu Association are seen handing over an umbrella and a lamp to the temple authorities.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**1st Row:** Mr. Rohana Aryarathne (Chief Administrative Officer), Mr.S.Thillainathan (Chief Editor- Thinakaran), Mr. Rasanga Harischandra (Director- Legal), Mr.Seelarathne Senarath (Director - Editorial), Mr. Bandula Padmakumara (Chairman), Mr. Upul Dissanayake (Director - Operations), Mr. Abhaya Amaradasa (General Manager), Mr.K. Ashokkumar Rajah (Deputy News Editor -Thinakaran), Mr. K.Eashwaralingham.

**2nd Row:** Mr. S.M. Premkumar, Mr. A. Parasuraman, Mr. S.Nageswaran, Mr. S. Rukmanikanthan, Mrs. Luxmy Nagadharshan Mrs. Vasuki Sivakumar, Mr. P.Veerasingam, Mr. N. Yogaranjan

**3rd Row:** Mr. S.Pandiyan (Local News Editor- Thinakaran), Mr. M. Prasath, Mr. V. Shivajyothi, Mr. K. Niranjan, Mr. S.Sureshraj, Mr. K.R.Sivakumar, Mr. M.Rajan, Mr.S.M.Vishvakanthan, Mr. K.Kunarasa (News Editor -Thinakaran)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடா வருடம் ஜோதி ஜோதியாய் நல்லைக்குமரன் மயிலேறி, தேரேறி
அடியாரர்களுக்கு அருள் கொடுத்து காட்சி தந்திடுவான்



45 ஆண்டுகளாக உங்கள் நன் மதிப்பைப் பெற்ற

# காவடி

## மார்க் கற்பூரம்

SINCE 1967

கற்பூரம் என்று கேட்காதீர்கள்

**காவடி**

என்று கேட்டு வாங்குங்கள்

நின்று நிலைக்கும் ஜோதி மயம்
காவடி கற்பூரம் என்றும் தரும்




தயாரிப்பாளர்கள்

T.P. No:- 2636818 கடை: 2329426 பக்ஸ்: 2422750

ஈமெயில்: prabakar01@gmail.com


Ms Sons Group of Companies
672/3, Galle Road,
Off Mayura Mw, Ratmalana
Phone: 2636818

ஏக விநியோகஸ்தர்கள்:
பிரபா டிரேடிங் கம்பனி
31, கபோஸ் லேன், கொழும்பு -11
2329426, 2422750



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஜை அறை அமைப்பது எப்படி?



> தெற்குக் கதவால்
> தலைவன் வாழ்வில்
> பொற்குவியல்
> காண்பானே.
> - வாஸ்து குறள்

**தெற்குப்புறம் உச்சத்தில் தலைவாசல் கொண்டு வாழ்பவன் பெருஞ்செல்வம் பெறுவது உறுதியாகும். ஆயினும் இதன் பலன் பெண்களுக்கு அதிகம்**

ஒரு வீட்டிற்குப் பூஜையறை தனியே அமைத்தல் சிறந்தது. ஆனால் இடவசதி காரணமாகப் பல வீடுகளில் அமைக்க முடிவதில்லை. பூஜை அறை எப்படியிருந்தால் நல்லது என்பதைப் பார்ப்போம்.

வட கிழக்கு அறையில் ஈசான்ய மூலையில் கனமான ஒரு ஷெல்ப் அல்லது அலுமாரி அமைத்து அதில் சாமியை வைத்து கும்பிடுவார்கள். இது ஈசான்யத்தைப் பாரமாக்கித் தீய பலன்களுக்கு வழி வகுக்கும்.

தேவைப்பட்டால் இந்த அறையில் கிழக்குச் சுவரில் ஒரு மாடம் அமைத்து அங்கு சாமியை வைத்துக் கும்பிடலாம்.

ஈசான்ய அறையைப் பூஜை அறையாக வைக்கும் போது அந்த அளவுக்குக் கன்னி மூலையில் சாமி படங்களையும், சிலைகளையும் வைக்க வேண்டும். ஈசான்ய மூலை புனிதமாக அல்லது சுத்தமாக இருக்க வேண்டும்.

பூஜையறை தனியே கிழக்கு, தென்மேற்கு, மேற்கு, வடக்கு ஆகிய பகுதிகளில் அமைக்கலாம். முடிந்தவரையில் சாமி படங்களைக் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்துக் கும்பிடலாம். இந்தத் திசை தான் சிறந்தது என்றில்லை. சாமியை எந்தத் திசையில் இருந்தும் கும்பிடலாம். பக்தி தான் முக்கியம். ஆனால் அக்னி மூலையைத் தவிர்க்க வேண்டும்.

தனியாக அறை அமைக்க வசதியில்லை என்றால், உங்களது ஏதாவது ஒரு அறையில் (சமையலறை தவிர) ஒரு அலுமாரி அல்லது பெஞ்ச் அமைத்து வெள்ளைத் துணியில் அதை மூடி அதன் மேல் சாமி படங்களையும், மற்றவைகளையும் வைத்துக் கொள்ளலாம்.

## வாஸ்து சாஸ்திரம் - சிறப்புக் குறிப்புகள்

- வீட்டிற்கு வரும் விருந்தினர்களையும், உறவினர்களையும் வீட்டின் வட மேற்கு மூலையில் உள்ள அறையில் தங்குமாறு செய்ய வேண்டும்.
- மாணவர்கள் தங்களது தேர்வுகளில் நல்ல மார்க்குகள் பெற்றுப் படிப்பில் சிறந்து விளங்குவதற்கும், படிக்கும் போதும் பேசும் போதும் தவிர மற்ற வேளைகளில் எல்லாம் கிழக்கு நோக்கியே உட்காருங்கள். அப்போது உங்கள் மூளை உற்சாகம் அடையும். சிந்தனையில் தெளிவும், திறமையும் கூடும். வடக்கு நோக்கியும் வேலைகளில் ஈடுபடலாம். தெற்கு, மேற்குத் திசைகளைத் தவிர்த்து விட வேண்டும்.
- நகை, பணம், விளையுயர்ந்த கற்கள் வைக்கும் பெட்டகத்தை, அலமாரியைத் தெற்மேற்கு (கன்னி மூலை) அறையில் தெற் மேற்கு மூலையில் வடக்கு அல்லது கிழக்கு நோக்கி வைக்க வேண்டும். அவை நீங்காமல் நிலைத்திருக்கும்.
- உடல் நலக்குறைவு உள்ளவர்களை வீட்டின் தெற்மேற்கு அறையில் படுக்கை அமைத்து தெற்குப் பக்கம் தலை வைத்துப் படுக்கும்படி செய்து வந்தால், உடல் நலம் விரைவில் குணமாகிவிடும். ஆயுள் பலம் பெருகும்.
- கடன்கள் தீர வேண்டுமானால், சந்திர கிரகணம், சூரிய கிரகணம் கூடிவரும் நாட்களில் கிரகண உச்ச நேரம் (மத்தியில்) முடிந்து, கிரகணம் நீங்கிக் கொண்டிருக்கும் வேளையில் முடிந்தளவு ஒரு தொகை (ஒரு ரூபாய் கூட இருக்கலாம்) கொடுத்துவிட்டால், அந்தக் கடன்கள் விரைவில் தீர்ந்து விடும். முடியவில்லை என்றால் அவர் பெயரில் பணம் வரவு எழுதி, தனியாக வைத்துக் கொள்ளவும். பேங்க் மற்றும் தனியார் கடன்கள் வங்கியிருந்தால் இதைப் பின்பற்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாழ்க்கையில் வெற்றி பெற விரும்புவோர் அனைவரும் வடக்கையும், கிழக்கையும் தங்கள் வலக்கையாகவும், இடக்கையாகவும் எப்போதும் உபயோகப்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.
- வீட்டிலும், அலுவலகத்திலும், வியாபார ஸ்தாபனங்களிலும் வடக்கைப் பார்த்தே உட்காருங்கள். அல்லது கிழக்கைப் பார்த்து உட்கார்ந்து வேலையினைத் தொடருங்கள். உற்சாகமும், தெளிவும் கிடைத்துக் காரியங்கள் சிறப்பாக நடைபெறும்.
- வீட்டின் ஈசான்ய மூலை (வடகிழக்கு) ஈரமாக எப்போதும் இருக்க வேண்டும். கிணறு, போர் தொட்டி போன்றவை ஈசான்யத்தில் அமைக்க வேண்டும். அதில் தண்ணீர் சிறிதளவாவது இருக்க வேண்டும். அப்போது தான் வீட்டில் பணப் புழக்கம் அதாவது பணம் (பசை) இருந்து கொண்டே இருக்கும்.
- வீட்டின் மேற்குப்புறம் குறைந்த அளவு காலியிடம் இருந்தால் (கிழக்கு, வடக்கை விட) உங்கள் கணவர் காலா காலத்தில் வீட்டிடிற்குத் திரும்புவார். அதிகமாக இருந்தால் தாமதமாகத் தான் வீட்டிற்குத் திரும்புவார்.
- தொழிலுக்கு முக்கியமானது கிழக்குத் திசை. எனவே, கிழக்கில் காலியிடம் இருந்தால், நாம் செய்யும் தொழில் வியாபாரம் நல்ல முறையில் இருக்கும். கிழக்கினை அடைத்து விடக் கூடாது.
- வீட்டிற்கு அருகில் கோவில்கள் 150 அடிக்கு மேல் இருந்தால் தோசங்கள் இல்லை. கோபுரத்தின் நிழல் வீட்டின் மேல் விழக் கூடாது.
- வீட்டிற்கு மேற்கு, தெற்கில் காலியிடம் அதிகம் இருந்தால் கடன் தொல்லைகள் அதிகமேற்படும். அதே போன்று கிழக்கும், வடக்கும் மற்ற திசைகளைவிட உயரமாக இருந்தாலும், கடன் தொல்லை, குழந்தைகள் பிரச்சினை, தொழிலில் முடக்கம் உருவாகும்.
- வீட்டின் அருகில் வளர்க்க வேண்டிய மரங்கள் மாமரம், வாழைமரம், வேப்பமரம், எலுமிச்சை, மல்லிகைப் பூச்செடி போன்றவை. இவை மனதிற்கு உற்சாகத்தையும், ஆரோக்கியத்தையும் கொடுப்பதன்றி, விஷக் காற்றுகளைத் தடுத்து உதவி செய்யும்.
- வில்வமரம், அகத்திச் செடி, மிளகு, இலுப்பை மரம், அவுரி, பனைமரம், எருக்கு, எட்டிமரம் போன்றவை வளர்க்கக் கூடாது. லட்சுமி கமாட்சத்தைக் குறைத்து விடும்.
- வீடுகளுக்குத் தாழ்வாரம் ஐந்தரை அடிக்குக் குறையாமல் அமைக்கவேண்டும்.
- வீடுகள் எந்தத் திசையில் வாசல் இருந்தாலும், வெளியில் இருக்கும் ரோடு மட்டத்தை விட வீட்டுத் தளம் உயரமாக இருக்க வேண்டும்.
- பிரதான வாசற்காலை விட மற்ற உள்வாசற்கால்கள் கொஞ்சம் சிறிதாக உள்ளடக்கமாக இருக்க வேண்டும்.
- ஒரு கதவுக்கு இரண்டு ஜன்னல்கள் என்ற விகிதத்தில் இருக்க வேண்டும். கட்டடம் கட்டுவதற்காக பில்லர்கள் (கொங்கிரீட் தூண்கள்) மற்றும் பீம்கள் அமைக்கும் போதும் இரட்டைப் படை எண்களிலேயே அமைக்க வேண்டும்.

**நன்றி: வாஸ்து சாஸ்திரம்**
**தொகுப்பு: ஆர். ஐங்கரன்**

# சிந்தனை கதைகள்

## இறைவன் தருவான்

செல்வந்தர் ஒருவர் ஒரு ஞானியை சந்தித்து, "ஐயா, தான தர்மம் செய்வது செலவுதானே, அதனால் என்ன நன்மை கிடைக்கும்?" என்று கேட்டார்.

நேரடியாக பதில் சொல்லாத ஞானி, செல்வந்தரிடம் இரு கை நிறைய இனிப்புகளைத் தந்தார்.

அதன்பிறகு ஒரு ஆப்பிளைத் தந்தார். அதனை வாங்க முடியாத பணக்காரர், தன்னருகில் இருந்த வேலையாளிடம் இனிப்புகளில் கொஞ்சத்தைத் தந்துவிட்டு ஆப்பிளை வாங்கினார். அடுத்து வைரக்கல் ஒன்றை கொடுத்தார் ஞானி. இப்போது ஆப்பிள் பணியாளன் கைக்குப் போனது. ஞானி கேட்டார், "நான் உன்னிடம் தந்ததை ஏன் நீ அவனிடம் கொடுத்தாய்?"

"அப்படி கொடுத்ததால்தானே அடுத்தடுத்து நீங்கள் தந்த உயர்வான பொருட்களை என்னால் வாங்க முடிந்தது...!"

சொன்ன பணக்காரரைப் பார்த்து புன்சிரித்த ஞானி சொன்னார் "தான தர்மம் செய்வதும் இப்படித்தான். அதனைச் செய்தால்தான் இறைவன் அடுத்தடுத்து உனக்கு தரும் உயர்வுகளை நீ பெற முடியும்!"

★★★

## அரிசி என்ன விலை?

துறவி ஒருவரிடம் சீடனாகச் சேர வந்தான் ஓர் இளைஞன். சில நாட்கள் அவனைத் தனது ஆசிரமத்தில் தங்கச் சொன்னார் துறவி. நாட்கள் நகர்ந்தன, ஒருநாள், இன்னும் ஏன் தன்னைச் சீடனாக ஏற்கவில்லை என வருத்தத்துடன் கேட்டான் இளைஞன். அதற்கு பதில் சொல்லாமல், "உங்கள் ஊரில் இப்போது அரிசி என்ன விலை விற்கிறது?" எனக் கேட்டார் துறவி.

"மன்னிக்கவும், நான் இப்போது அங்கே இல்லை. அதோடு, துறவறம் நாடும் எனக்கு எந்தப் பொருளின் விலையையும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை!" சொன்ன இளைஞனை, அப்போதே சீடனாக ஏற்றார் துறவி.

★★★

## மோட்சம் உண்டா?

மன்னன் ஒருவனுக்கு துறவி ஒருவரை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. அவர் பெருமை அறியாத அவன், "எளிதாக மோட்சம் பெற என்ன வழி?" என்று மிரட்டலாகக் கேட்டான்.

"அதோ தெரியும் ஏழு மலைகளையும் சுற்றி வந்தால் மோட்சம் கிடைக்கும்...!" என்றார் துறவி.


"இதோ உடனே சுற்றி வருகிறேன்..." என்று புறப்பட்டான் மன்னன். விரைவிலேயே திரும்பி வந்தவன், "நான் ஏழு மலைகளையும் வலம் வந்துவிட்டேன். ஏன் இன்னும் மோட்சம் கிடைக்கவில்லை?" என் கோபமாகக் கத்தினான். துறவி அமைதியாகச் சொன்னார்... "அது, உன் குதிரைக்குக் கிடைத்து விட்டது. நீ எங்கே சுற்றி வந்தாய். அதுதானே சுற்றி வந்தது...!" கர்வமும் கோபமும் விட்டு, தலைகுனிந்தான் அரசன்.

**நன்றி: இந்து ஒளி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் தெண்டாயுதபாணி கோயில்



1859ல் தான் செட்டியார்கள் தெண்டாயுதபாணி கோவிலைக் கட்டினார்கள் என்று கல்வெட்டு வரலாற்றுக் குறிப்பு காட்டுகிறது. முருகப் பெருமானாகிய தெண்டாயுதபாணியே மூலவராக இருக்கிறார். ஆதியில் சிங்கப்பூர் ஆற்றங்கரை ஓரத்திலிருந்து ஒரு அரச மரத்தடியில் முருகனின் வேலை மட்டும் நாட்டி, ஸ்தாபனம் செய்து அபிஷேக ஆராதனை வழிபாடு பூஜைகள் செய்துள்ளார்கள்.

1859 ஆண்டுகளில் இங்கிருந்துதான் மலாயாவுக்குச் செல்லும் ரயில் நிலையம் அமைந்துள்ளது. ரயில் எஞ்சினுக்கு வேண்டிய தண்ணீர் நிரப்ப உயரமான நீர் தொட்டிகட்டி இருப்பார்கள். அதுவே காரணப் பெயராக டேங் ரோடு (Tank Road) ஆகிவிட்டது.

இந்தநிலம் ஒக்ஸ்லி எனும் டொக்டருக்குச் சொந்தமான நிலம் அவரிடமிருந்து நிலத்தை வாங்கி கோயிலைக் கட்ட ஆரம்பித்துள்ளார்கள். முதல் திருக்குட நன்னீராடு விழா 04.04.1859-இல் நடந்திருக்கிறது. பின்னர் 02.02.1936 லிலும், 07.07.1955 லிலும் கோயில் திருப்பணி நடந்து, நன்னீராட்டு விழாக்கள் நடைபெற்றுள்ளன. கருவறையின் நுழைவாயிலில் ஜம்பு விநாயகர் திருவுருவம் இடமுறமாகவும் இடும்பர் வலப்புறமாகவும் அமைந்துள்ளது. கோயிலின் முன்பக்கம் இரண்டு திண்ணைகள் பின்பு செட்டி நாட்டு வீடுகளிலுள்ள அலங்கார அமைப்பில் அர்த்த மண்டபம், கருவறை என்று முன்பு கோயிலிருந்தது. கார்த்திகை கட்டு என்று ஒரு கட்டட அமைப்பும் கார்த்திகை போன்ற நாட்களில் அன்னதானம் செய்வதற்கு 1859 முதல் 1981 வரை இருந்தது. முதன் முதற் தெய்வமான சிவபெருமானையும் 1878 ஆம் ஆண்டில் அருவுருத் திருமேனியான சிவலிங்கத்தையும் அவரது சக்தியாகிய உமையம்மையை வைத்து தனித்தனியே ஒரு கோயிலாத் தெண்டாயுதபாணி கோயிலை ஒட்டியே கட்டி வழிபடத் தலைப்பட்டனர். 26.01.1886 ல் திருக்குட நன்னீராட்டு நடைபெற்றது.

சிவபெருமானுக்குச் சொக்கலிங்கம்/ சுந்தரேஸ்வரர் என்றும் அம்மைக்கு மீனாட்சி என்றும் பெயர் சூட்டித் தொழுதனர். மதுரையிலுள்ள இறைவனை இறைவி பெயரையே தாங்கள் எழுப்பும் ஆலயங்களுக்கு பெயரிட்டு வழங்குவதை மரபாகக் கொண்டுள்ளனர். சிவன், அம்பிகை இருவருக்கும் தனித்தனிக் கருவறைக் கோயில்கள் இப்போதுள்ளன. மூர்த்திச் சிறப்பு தெண்டாயுதபாணி ஆலயத்தின் மூலவர் உண்மையில் வேல் வடிவிலேயே அமைந்திருக்கின்றார்.



முருகப் பெருமானின் வடிவம் தங்க அங்கியாக அவ்வேலின் மேல் சாத்தப் பெற்றிருக்கிறது. இதுவே பக்தர்கள் காணும் வழிபாடு எனவே தான் இத்திருவுருவத்துக்கு முன்னர் மயிலுருவச் சிலையோ பலிபீடமோ இல்லை. மேலும் கருவறையில் உற்சவ விக்ரமாக ஐம்பொன்னால் செய்யப்பட்ட முருகப் பெருமான் திருவுருவம் அருகில் வழிபாடு செய்யப்படுகிறது.

நாள்தோறும் நடைபெறும் நீராட்டு அபிசேஷகம் மூலவரான வேலுக்கே செய்யப்படுகிறது. இதனைத் திரைமறைவில் செய்வதே வழக்கமாக இருக்கிறது. மகாசிவராத்திரியன்றும் வருடாபிஷேகத்தின் போதும் நீராட்டினைப் பக்தர்கள் கண்டு மகிழலாம். சிவன் கோயில் கருவறையில் சிவபெருமான் லிங்க வடிவிலும் இன்னொரு கருவறையில் மீனாட்சி அம்மனும் எழுந்தருளியிருக்கிறார்கள். சிவன், அம்பிகையுடன் தெண்டாயுதபாணி, நந்தி, தட்சிணாமூர்த்தி, சண்டேசுவர், வயிரவர், அண்ணாமலையார், பிரம்மா, துர்க்கை, நவக்கிரகங்கள் ஆகிய திருவுருவங்களும் உள்ளன. நடராசர் சிவகாமி செப்புத் திருமேனி உருவங்கள் தனியே உள்ளன. இத்திருவுருவங்களுக்கு ஆகம முறைப்படி சிவாச்சாரியார்கள் பூசை செய்கின்றனர்.தெண்டாயுதபாணிக்குப் பண்டாரங்கள் பூசை செய்கின்றனர். கோபுர சிறப்பு அருள் மணமும் கலையழகும் கொண்டு தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய கோயிலாகச் சிங்கப்பூர் டேங் ரோடு கம்பீரமாக எழுந்தருளியிருக்கின்றது தெண்டாயுதபாணி கோயில் தமிழகத்தின் தலைசிறந்த சிற்பிகளைக் கொண்டு சிற்பச் செந்நூல் முறைப்படி இராசகோபுரம், விமானங்களும், எழில்சேர் சிற்பங்களும், திருமண மண்டபமும் அமைக்கப் பெற்றுள்ளது. சிற்பச் சிறப்பு தமிழ்நாட்டுக் கோயில்களிலும் காணக் கிடைக்காத பல பதுமையான கலை சிற்பங்கள் தெண்டாயுத ஆலயத்தில் காணலாம். சன்னதியில் உள்ள மண்டபத் தூண்களில் முருகனின் ஆறு நிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. இவைகள் முருகனின் அறுபடை வீடுகளின் அமைப்பைச் சித்தரிக்கும் வகையில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best*

*Compliments From*



Enlightenment Empowerment Happiness

Thondaman Foundation

வேக்ஹவுஸ் இந்துமன்றத்தின்
வாணி விழா சிறப்புற
எமது வாழ்த்துகள்

**சௌமியமூர்த்தி தொண்டமான்**
**ஞாபகார்த்த மன்றம்**

இல.15A, பிளவர் டெரஸ்,
கொழும்பு - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best*
*Compliments From*



# Nithya Shree Jewellery

*The Temple of Gold*



150, Galle Road,
Wellawatte, Colombo - 06
Sri Lanka

Tel : 94-11-2554869,
5767170,
Fax : +94-11-5767170

E - mail : nithyashreey@yahoo.com

Web site: www.nithyashree.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*




*From sunrise to sunrise any time, any where*

BOC, the pioneer bank for Credit Cards in Sri Lanka offers a range of cards to suit your different needs.

- Lowest interest rates
- Additional limit for Emergency hospitalization
- Free Life Insurance cover or permanent total disability cover *
- Free lost baggage insurance cover *
- A generous loyalty scheme in which you have more when you spend more
- Interest- free easy payment scheme and many other benefits

* Conditions apply




**BOC Card Centre,**
22nd floor, Head Office Bulding,
No 4, Bank of Ceylon Mawatha, Colombo 1
Sri Lanka
Tel: 011 2544300/301
Fax: 011 2393931
Web: www.boc.lk
E-mail: boccard1@boc.lk

Your everyday card. BOC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்




**லேக்ஹவுஸ் இந்துமன்றத்தின்
வாணிவிழா சிறப்புற
எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்!**

Proprietor:-

**திரு. செல்வரட்ணம் திருப்பதி**

ICL Marketing (Jaffna Agent)

லயன்ஸ் கிளப் தலைவர் - திருநெல்வேலி வட்டம்



# P.S.T STORES

## பல்பொருள் வாணிபம்

இல:- 04, பாடசாலை வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

Tel :- 021 - 4922158
Mob :- 077- 3923036

E-mail:- psthirupathy@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:-


proprietor:
A.M.S. Luxman

# LUXMI

**Photo, Video and Digital Colour Lab**






* PHOTOGRAPHY
* VIDEOGRAPHY
* VIDEO EDITING
* SPECIAL EFFECTS
* STORY BOOK ALBUM
* VISHUALS

EOS 7D

E-MAIL...LUXMIDIGITALCOLOUR@GMAIL.COM
CALL...032 22 22 548,077 79 79 367,077 18 87 435



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# DATAMACX



No. 389, Galle Road,
Wellawatte,
Colombo - 06

Dealers in Computer Accessories, Cell Phone Accessories and Electrical Items



Tel : 011 2364365
Hotline : 0777 781788



e-mail: info@datamacx.com
www.datamacx.com

---

*With Best Compliments From*

P. Sarveswaran

# HOUSE OF CURTAIN

(NO OTHER BRANCHES)

IMPORTERS & TEXTILE DEALERS SPECIALIST IN CURTANING - UPHOLSTERIES
WE UNDERTAKE TAILORING

No. 175, Main Street, Colombo - 11

Tel : 011 2386771
Fax : 011 2327549




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:-*

சகல
வினாத்தாள்களும்
கிடைக்கும்



# SRI RANJANI BOOK SHOP



அறிவொளி பரீட்சை நோக்கு,
பரீட்சை பொதி,
விஞ்ஞான ஒளி, கணித வழி,
தமிழ் விழி

தொடர்பு : MR.Nirmalan
Tel : 0114947856
Mob : 0777413990

*With Best Compliments From*



RT

# RANMUTHU TEXTILE

Wholesale Dealers in Textiles

106, Third cross street,
Colombo - 11

Phone : 2439192
Fax : 2439192



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AVM CD CENTRE

Dealers in : CD, DVD Memory Cards
& Computer Assories

231/10, Santhosh Plaza, Main Street, Colombo 11
Tel : 0112 438825, 0112 337044




மொத்த வியாபாரிகளுக்கு சிறப்பு விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

*With Best Compliments From*

**Suresh Fernando**
Professional Hair Stylist & Beautician
South Korea / Thailand / India Qualified



# Suresh

*Hair & Beauty Creation*



2/1A, 1/1, High Leval Road,
Kirulapone, Colombo - 06.
**Mobile:** 0711 692094 ,
**Tel:** 0115 288505 / 0115 288506
**Email:** sureshhairandbeauty@live.com

**Web:** www.sureshhairandbeautycreation.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# Eden Jewels


# ஈடன் ஜுவலிஸ்

வெள்ளவத்தை

*Wellawatte*



உங்கள்
தங்க நகைகளின்
தரத்தை எம்மிடம்
துல்லியமாக
Karatmeter மூலம்
(XRF method)
தெரிந்து கொள்ளலாம்




| Element | conc.% |
|---|---|
| Gold (Au) | 91.6 |
| Silver (Au) | 1.91 |
| Copper (Cu) | 5.58 |
| Zine (Zn) | 0.82 |
| Cadmium (Cd) | 0.00 |

**230** Galle Road, Wellawatte
Tel: 2 361 363, 236 0364
E-mail: edenjewels230@gmail.com

*With Best Compliments From*

# இளந்தளிர் முத்தமிழ் ஒளிமன்றம்

தம்பிலுவில்

## THE TAMIL YOUTH ART & CULTURAL ASSOCIATION - THAMBILUVIL

Tel: 067-4920557/ 0785-289589/077-3797364/077-4692379
E-mail: ellanthalir_99@yahoo.com.uk

Reg. No. HA/04/AM/90
பதிவு இல. வ கி மா/க அ/ப ண்/அ ம்/த ம் 12/2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# SDG FLOWERS

திருமண மணவறை ~ பூமாலை, மாலை
சுப காரியத்திற்கு சகல
ஓடர்களும் குறைந்த
செலவில் பெற்றுக் கொள்ளலாம்

432 A, Havelock Road,
Colombo - 06





Hotline : 0777893428
Tel : 0114271987
0775911128

*With best compliments From:-*

Tel:- 011 2384757

STE

## SRI THURKKA ENTERPRISE

GENERAL MERCHANTS
& COMMISSION AGENTS

Wholesale & Retail Dealers in
Rich & Ceylon Produce

133, 5th Cross Street,
Colombo - 11
Tel: 011 2384757

*With best compliments From:-*





## Sangeetha Pawn Brokers

**Ganesh:- 0714-046331**
**298,Layards Broadway,**
**Colombo-14**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:-*

*Miss Dushyanthini*
(S.L.A.H.A.B)

## Ever Shine
### Beauty palace

No.127/A, Vivekananda Hill,
Colombo - 13


Mob: 077 2821028

*With Best Compliments From:-*

## COMMERCIAL FREIGHTERS
**CLEARING AND FOWARDING AGENT**

No.136, Vivekananda Hill, Colombo - 13,
Tel : 0094 11 3135012
Fax : 0094 11 2384994

*With Best Compliments From:-*

## Nithiyakala

### Jewelers

**All Oreders Executive promptly**

No. 4S, Sea Street, Colombo - 11
Tel: 011- 4912140 / 2447111

*With Best Compliments From:-*

## MARK SUGANTH TRADING (PVT) LTD.

Importers Distributors of Fishing Nets P.E.Ropes,
Other Accessories & Diving Equipments

**Head Office:**
No:143A 1/1,
Bankshall Street,
Colombo 11.
Sri Lanka

Tel : 0094 11 5872851, 2392610
Fax : 0094 11 2521322, 2524355



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:-*

**Ranjitha Traders**

Importers, General Merchants &
Commission Agents

No. 180, Colombo Street,
Kandy, Sri Lanka
Tel : 081 2232350
081 2229155
Fax : 081 2229156

No. 121, 5th Cross Steet,
Colombo - 11,
Sri Lanka
Tel : 011 - 2422830/40
Fax : 011- 2422850

*With Best Compliments From:-*

**POOBALASINGHAM**
**BOOK DEPOT**

IMPORTERS, EXPORTERS, SELLERS &
PUBLISHERS OF BOOKS STATIONERS
AND NEWS AGENTS

202, Sea Street, Colombo 11,
Sri Lanka.
Tel : 2422321, 2435713
Fax : 2337313

E-mail: pbdho@sltnet.lk

**Branches:**
340, Sea street,
Colombo - 11, Sri Lanka
Tel: 2395665

309A - 2/3, Galle Road,
Colombo - 06, Sri Lanka
Tel : 4-515775, 2504266

4A, Hospital Road,
Jaffna.
Tel: 021 - 2226693

*With Best Compliments From:-*

**The K Fancy**

Wholesale & Retail of Imitation
Jewellery, Cosmetics &
Bridal Set

**Rental of**
Dancing set, Ottiyanam &
Wedding set

# 116, St. Anthony's Mawatha, Colombo 13,
Tel : 0723608313, 0776652336

*With Best Compliments From:-*

MA
183

**MAYURAA AGENCY**

**General Merchants
& Commission Agents**

N0. 183, Prince Street,
Colombo - 11

Tel: 011 4714706
0777 239636



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:-*

## AIRSHIP (PVT) LTD

SHIPPING, CLEARING &
FORWARDING AGENTS

Tel : 2470319
Mob : 0777320295

136, Vivekananda Hill,
Colombo 13,
Sri Lanka

*With Best Compliments From:-*

## PRINCESS &
## CLEARING AGENT

Customs House Agent sea/ Air Cargo

No. 421/1, A Ferguson Road,
Mattakkuliya,
Colombo - 15.
SriLanka

Tel : 011 5744022
Mob : 077 3916877
Email: princessbala@yahoo.com

Sea/Air Cargo, Customs documentation Clearing &
Forwarding, imports & Exports

*With best*
*compliments From:-*

## Mannings Com

*Bus For Hire*
*& Communication*



No: 07,
Manning Place,
Wellawatta,
Colombo - 06

Tel: 011 2361670
075 7423570

*With Best Compliments From:-*

## Letchumi Jewellers

A. Muthappan Chettiar J.P
Proprietor

111, Sea Street, Colombo - 11,
Tel: 2439178
Mob:- 0714 349104

*Branches*

**Hill Top Agency**
Licence No.561
No. 111, Sea Street,
Colombo - 11
Tel: 4714881, 2447125
Fax: 2333047

**Letchumi Jewellers**
42/34, Colombo - Road,
Kaluwella. (Kittangi)
Galle.
Tel: 2222899





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:-*

சேமமடு

## சேமமடு பொத்தகசாலை
## சேமமடு பதிப்பகம்
## பதிமம் பதிப்பகம்

தொலைபேசி:

011-2472362
011-2331475
077-7345666
071-2726778

யு.ஜீ. 50
பீப்பள்ஸ் பார்க்,
கொழும்பு - 11
இலங்கை

---

*With Best Compliments From:-*

## Arul Study Circle

Tel:- 2331495, 2470148

**No:- 111, Bonjean Road,**
**Kotahena,**
**Colombo - 13**

---

*with Best Compliments From*



**வெக்ஹவுஸ் இந்துமன்ற**
**வாணிவிழா சிறப்புற**
**எனது வாழ்த்துகள்**

*Wel Wisher*

---

*With Best Compliments From:-*



## LAKSHAN'S
## லக்ஷான்ஸ்

***wholesale Retail Dealers in all kinds of Exercises Books, Stationary, Electronic Items, Incense Sticks & General Merchants***

No. 124, Dam Street,
Colombo 12
Tel - 011-2432272/2458143



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு உதவிக்கரம் நீட்டிய இவர்களுக்கும் இந்நிறுவனங்களுக்கும்

# எமது நன்றிகள்

- லேக் ஹவுஸ் நிறுவனம்
- அப்சராஸ் சாரி சென்டர்
- டாக்டர் உதயகுமார்
- திரு வி. தர்ஷன் (அவுஸ்திரேலியா)
- திரு வி. ஸ்ரீனிவாசன் (அவுஸ்திரேலியா)
- திரு கே. சந்திரசேகரன்
- திரு ஜெரால்ட் நடேசன்
- எமக்கு விளம்பர உதவி வழங்கிய நிறுவனங்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும்


## வியாபாரத்திற்கு விளம்பரம் செய்யுங்கள்...
### குறைந்த கட்டணம் நிறைந்த பலன்

தினகரன்

கறுப்பு / வெள்ளை

| | |
|---|---|
| ஒருமுறை விளம்பரப்படுத்த | 200/- கலம் / செ.மீ |
| மீண்டும் விளம்பரப்படுத்த | 100/- கலம் / செ.மீ |

வர்ணம்

| | |
|---|---|
| ஒருமுறை விளம்பரப்படுத்த | 285/- கலம் / செ.மீ |
| மீண்டும் விளம்பரப்படுத்த | 142.50/- கலம் / செ.மீ |

தினகரன் வாரமஞ்சரி

கறுப்பு / வெள்ளை

| | |
|---|---|
| ஒருமுறை விளம்பரப்படுத்த | 250/- கலம் / செ.மீ |
| மீண்டும் விளம்பரப்படுத்த | 125/- கலம் / செ.மீ |

வர்ணம்

| | |
|---|---|
| ஒருமுறை விளம்பரப்படுத்த | 340/- கலம் / செ.மீ |
| மீண்டும் விளம்பரப்படுத்த | 170/- கலம் / செ.மீ |


உங்கள் விளம்பரத்திற்கு தொடர்பு கொள்ளுங்கள்

தொலைபேசி - 011-2429367, 011-2429322 / 011-2429321
தொலைநகல் - 011-2429320

ANCL
The Associated News Papers of Ceylon Limited, Colombo - 10




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org